Registered as a News Paper in Sri Lanka

# தினக்கதிர்

தினசரி

THINAKKATHIR DAILY

ஒளி - 02 - கதிர் - 61 19.06.2001 செவ்வாய்க்கிழமை பக்கங்கள் - 08 விலை ரூபா 5/-

திருமண வைபவங்களுக்கான
தரமான 'ரிச் கேக்' வாங்க
.....நாடுங்கள்.......
Sunshine
136, திருமலை வீதி, மட்டக்களப்பு.
தொ.பே.இல.065-25159
தொலைபேசி ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்

## ஜானக பெரேராவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து அவுஸ்திரேலியத் தமிழர்கள் ஆர்ப்பாட்டம்

(சிட்னி)

இலங்கையின் முன்னாள் இராணுவத்தளபதி ஜானக பெரேராவை அவுஸ்திரேலியாவின் இலங்கைக்கான தூதுவராக நியமிக்கக்கூடாது எனக் கோரி நேற்று நூற்றுக்கணக்கான தமிழர்கள் அவுஸ்திரேலியாவின் நாடாளுமன்றத்திற்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அதனைத் தொடர்ந்து இந்த நியமனத்தை இரத்துச் செய்யுமாறு கோரும் மனுவொன்றையும் அரசாங்கத்திடம் சமர்ப்பித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக அவுஸ்திரேலியாவின் தென்துருவத் தமிழ்ச் சங்கத்தின் விக்டோரியா மாநிலப் பிரதிநிதி மனோ நவரெட்ணம் கருத்து தெரிவிக்கையில் இந்த ஆர்ப்பாட்டப் பேரணியைத் தொடர்ந்து அரசு உரிய நடவடிக்கை எடுக்கத் தவறினால் தொடர்ந்து இவ்வாறான போராட்டங்களை நடத்துவதுடன் சட்ட ரீதியாகவும் இவரது நியமனத்தை நிராகரிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவிருப்பதாகவும் தெரி

(8ம் பக்கம் பார்க்க)

# யாழ் குடாநாட்டில் மீண்டும்— —பெரும் போர் மூழும் அபாயம்

## இரு தரப்பும் பாரிய அளவில் படை, ஆயுதங்கள் குவிப்பு

(யாழிலிருந்து நமது விஷேட நிருபர்)

**யாழ் குடாநாட்டுப் பகுதியில் அரச படைகளுக்கும், விடுதலைப்புலிகளுக்குமிடையே மீண்டும் பெரும் போர் மூழ்வதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. குடாநாட்டின் கரையோரப் பகுதிகளில் இருதரப்பும் பாரியளவில் படைகளையும், ஆயுதங்களையும் குவித்து வருவதாகவும் தெரிய வருகின்றது.**

யாழ் குடாநாட்டின் நாகர் கோவில் எழுதுமட்டுவாள், மற்றும் பளையை அண்டிய பிரதேசங்களில் புலிகள் பெருமளவில் தமது ஆட்களையும், பாரிய ஆயுதங்களையும் குவித்து வருவதாக புலனாய்வுத் துறையினருக்குத் தெரியவந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குடாநாட்டில் ஆரம்பிக்கப்படக்கூடிய பாரிய தாக்குதலொன்றுக்குப் பின்தள வசதிகளை ஏற்படுத்தக்கூடியவாறு பூநகரிப் பகுதியிலும் பெருமளவில் புலிகளின் படையணிகள் குவிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

அண்மைக்காலமாக புலிகளுக்குப் பல பாரிய கப்பல்களில் ஆயுதங்கள் கொண்டு வரப்பட்டதையடுத்தே புலிகள் இந்தப் பாரிய தாக்குதல்களுக்கான ஆயத்தங்களை மேற்கொண்டு வருவதாக கொழும்பு ஆங்கில நாளிதலொன்று ஞாயிறன்று செய்தி வெளியிட்டிருந்தது.

**படையினரும் தயார்**

இதேவேளை புலிகளால் பாரிய தாக்குதல் ஏதும் தொடுக்கப்படலாம் என்ற எதிர்பார்ப்பில், படையினரும் பாரிய தாக்குதலொன்றுக்கான ஆயத்தங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

நாகர்கோவில், எழுதுமட்டுவாள் பகுதிகளில் படையினர் தமது அணிகளைப் பெருமளவில் குவித்து வருவதுடன் பாரிய இரா

(8ம் பக்கம் பார்க்க)

## ஆங்கில போதனைக்கு தென்னிலங்கை மாணவர்கள் எதிர்ப்பு.

(தவம்)

க.பொ.த. உயர்தர பிரிவில் கணித,விஞ்ஞான பாடநெறிகளை ஆங்கிலத்தில் போதிக்க எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு தென்னிலங்கை மாணவர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

அரசின் இந்த முயற்சியை வன்மையாக எதிர்த்து வரும் அனைத்து பல்கலைக்கழக மாணவர் சம்மேளனம் தென்னிலங்கையைச்சேர்ந்த 20ஆயிரம் க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவர் களின் கையொப்பங்களைச் சேகரித்துள்ளது.

இந்தக் கையொப்பங்கள் அடங்கிய மகஜர் இன்று கல்வியமைச்சரிடம் கையளிக்கப்படும்.

க.பொ.த. உயர்தர வகுப்பில் ஆங்கிலப் பாடத்தை போதிக்க எடுக்

(8ம் பக்கம் பார்க்க)

## இன ஒற்றுமையைப் பேணுங்கள் மௌலானா எம்.பி. வேண்டுகோள்

(ஏறாவூர் நிருபர்)

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் பேச்சுவார்த்தை நடந்து சமாதானம் ஏற்படும் நிம்மதியாக, சுதந்திரமாக வாழக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படும் என்று எதிர்பார்த்திருந்த எமது மக்கள் மீண்டும் ஒரு யுத்த சூழலைச் சந்திப்பது மிகவும் வேதனைக்குரியதாகும். இந்நிலையில் ஆயுதம் தாங்கியவர்களுக்கிடையே நடக்கும் சண்டையை இனங்களுக்கிடையிலான பகையாக மாற இடமளிக்கக் கூடாது. சிறிய சம்பவங்களை அல்லது நடக்காத விடயங்களை திரிவுபடுத்தி மக்களுக்கு மத்தியில் பீதி கொள்ளும் வகையில் உண்மைக்கு மாறான வதந்திகள் பரப்பப்படுகின்றன. இந்த விட

(8ம் பக்கம் பார்க்க)

## காத்தான்குடியில் நேற்று பூரண ஹர்த்தால்.

(அரியம்)

ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸின் உயர் பீடத்தில் அமைச்சர் பேரியல் அஷ்ரப் மற்றும் முன்னாள் பிரதி அமைச்சர் எம்.ஏ.எல்.எம். ஹிஸ்புல்லாஹ் ஆகியோரை இணைத்துக் கொள்ளுமாறு கோரி நேற்று காத்தான்குடியில் ஹர்த்தால் அனுஸ்ட்டிக்கப்பட்டது.

முஸ்லீம் காங்கிரஸ் ஆதரவாளர்களால் நடத்தப்பட்ட இந்த ஹர்த்தால் காரணமாக நேற்று காத்தான்குடியில் கடைகள் மூடப்பட்டிருந்தன. வாகனப் போக்குவரத்துக்கள் இடம்பெறவில்லை. அரச அலுவலகங்கள் இயங்கவில்லை. வீதிகளில் டயர்கள் போட்டு

(8ம் பக்கம் பார்க்க)

முஸ்லிம் காங்கிரஸ் றவூஹக்கீம் ஆதரவாளர்கள் பிரார்த்தனை; ஹிஸ்புல்லாஹ் ஆதரவாளர்கள் ஹர்த்தால்

-செய்தி



இவங்கட சாதனையால முஸ்லிம் மக்களுக்குத் தான் வேதனை...........

## தலை துண்டிக்கப்பட்ட சடலம் தொடர்பாக விசாரணை

(வேதாந்தி)

மட்டக்களப்பு இருதயபுரத்தில் நேற்று முன்தினம் கழுத்து, கை, என்பன துண்டிக்கப்பட்ட நிலையில் கண்டெடுக்கப்பட்ட சிசுவின் சடலம் நேற்று வைத்திய பரிசோதனைக் காக கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டதாகத் தெரிவிக் கப்படுகிறது.

இரண்டு மாதம் மதிக்கத்தக்க இச்சிசுவின் மரணம் குறித்து மட்டக்களப்பு பொலிசார் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

கிழக்கு மாகாண மக்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

இனி கொழும்புக்கு செல்ல தேவையில்லை. சமூக ஒளி எம்.எச்.எம்.பாறுக் அவர்களின் 20ஆண்டுகள் வெளிநாட்டு வேலைவாய்ப்பு சேவையில் பெண்களுக்கு இலவசமாக தலைநகரில் மட்டும் அல்லாது கிழக்கு மாகாணத்திலும் முஸ்லிம், முஸ்லிம் அல்லாத பல்லாயிரக் கணக்கான மக்கள் மத்தியில் ஒளி வீசுகின்ற அரச அங்கீகாரம் பெற்ற ஒரே ஸ்தாபனம்.

ஆண்களுக்கு...........

* TILE PIXER,
* MASON,
* CARPENTER,
* PIANTER,
* ELECTRICIAN,
* ELECTRONIC TECHNICIAN.

போன்ற வேலை வாய்ப்புக்கள் உண்டு.

மேலதிக விபரங்களுக்கு:
Fahim Enterprises (Pvt) Ltd,
152/1,152/2.Main street,
Kattankudi.

அனுமதி இல.1755

advt

## ஏறாவூரில் தொடர்ந்து பதட்ட நிலை

(அரியம்)

ஏறாவூர் பகுதியில் தொடர்ந்து பதட்டம் நிலவி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 13ம் திகதி இரவு ஏறாவூரில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தின் எதிரொலியாக ஏறாவூர் நகருக்குள் கூலி தொழில் செய்ய சென்ற தமிழ் தொழிலாளர்கள் முஸ்லீம் பொலிசாரினால் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனராம்.

(8ம் பக்கம் பார்க்க)

## அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம்கள் —பிரார்த்தனை வழிபாடு!

### இயல்பு நிலை பாதிப்பு!

(மருதமுனை ஹரீஷா)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிஸின் பிரார்த்தனை நாள் பிரகடனம் நேற்று கிழக்கு மாகாணத்தில் பூரணமாக அனுஷ்டிக்கப்பட்டது. இதன் காரணமாக கல்முனை சம்மாந்துறை, அக்கரைப்பற்று, காத்தான்குடி போன்ற நகரங்களில் கடைகள் பூட்டப்பட்டிருந்தது. போக்குவரத்து ஸ்தம்பித நிலையை அடைந்திருந்தது. காரியாலயங்கள் பூரணமாக இயங்கவில்லை. பாடசாலைகளில் மாணவர்களின் வருகை மிகவும் குறைவாகக் காணப்பட்டது.

இந்தப் பிரார்த்தனை நாள் பிரகடனம் தொடர்பாக அமைச்சர் றவூப் ஹக்கீமின் மக்கள் தொடர்புச் செயலாளர் எம்.ஐ.எம். மன்சூர் தெரிவிக்கையில் இந்தப் "பிரார்த்தனை நாள்" பிரகடனத்தின்

(8ம் பக்கம் பார்க்க)

தினக்கதிர்

த.பெ. இல: 06
155, திருமலை வீதி ,
மட்டக்களப்பு.
தொ. பே. இல : 065 - 22554
E-mail :- tkathir@sltnet.lk

# குழப்பம் ஏன்?

கிழக்கு மாகாணத்தின் முஸ்லீம் பகுதிகள் எங்கும் நேற்று பூரணமான ஹர்த்தால் அனுட்டிக்கப்பட்டது.

ஏன் எதற்காக நடாத்தப்படுகிறது என்பது பற்றிப் பல்வேறு குழப்பங்களின் மத்தியிலும் இப்பகுதிகளில் இந்த ஹர்த்தால் நேற்று அனுட்டிக்கப்பட்டிருக்கிறது.

காத்தான்குடி பகுதியிலிருந்து வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரத்தில் , அமைச்சர் பேரியல் அஷ்ரப் மற்றும் ஹிஸ்புல்லா ஆகியோரை மீளவும் முஸ்லீம் காங்கிரஸ் கட்சியின் உயர் பீடத்தில் இணைக்க வேண்டும் என்று கோரியே ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இதே வேளை கல்முனைப் பகுதியில் மு.கா போராளிகள் எனப் பெயரிடப்பட்டு வெளியடப்பட்ட துண்டுப்பிரசுரத்தில் அமைச்சர் ஹக்கீம் விடுத்த பிரார்த்தனைக் கோரிக்கையை சிறப்பாக நிறைவேற்றுமுகமாக கடைகள், அலுவலகங்களைப் பூட்டி ஹர்த்தால் அனுட்டிக்கும்படி கோராப்பட்டிருந்தது.

இதே வேளை, கல்முனைப் பகுதியில் வெளியிடப்பட்ட மற்றுமொரு துண்டுப்பிரசுரத்தில் ''ஹர்த்தால், கடை பூட்டுதல், கல்லெறிதல், ஊரைக்குழப்புதல்'' என்பன வேண்டாம் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

எது எப்படி இருந்தாலும், வழமை போல ஹர்த்தால் என்ற பேச்சடிபட்டதுமே, ஏன் எதற்கு என்றில்லாமல் பெரும்பாலான முஸ்லீம் பகுதிகள் ஸ்தம்பிதமடைந்து விட்டன.

எப்படியோ ஹர்த்தால் வெற்றி பெற்று விட்டது. ஆனால் இதன் மூலம் என்ன பயன் பெறப்பட்டது என்பது தான் இவர்கள் முன் வைக்கப்படவேண்டிய கேள்வியாகிறது. 'முஸ்லீம் சமூகம் சிதறுண்டு, வெவ்வேறு கோரிக்கைகளுடன் ஒரு போராட்டத்தை நடத்தியது என்ற தகவல்தான் இறுதியில் எஞ்சி நிற்கிறது.

உரிமைகளை வென்றெடுப்பதற்காக ஒன்று திரண்டு நடாத்தப்படவேண்டிய போராட்டம் சிதைவுண்டு போனதே உண்மையில் கிடைத்த பலன்.

வென்றெடுக்கப்பட வேண்டிய உரிமை எது? என்பது தொடர்பான ஓர் தெளிவின்றி இன்று முஸ்லீம் சமூகம் போராடத் தலைப்பட்டுள்ளதா என்றே எண்ணத் தோன்றுகிறது.

முஸ்லீம்களைப் பிரதிநிதித்தவப் படுத்தும் ஒரு கட்சி எனத் தம்மைக் கூறிக் கொள்ளும் முஸ்லீம் காங்கிரஸ், அரசியலில் ஒரு முக்கிய அங்கம் வகித்த காலப்பகுதியிலேயே மாவனல்லையில் முஸ்லீம்களுக்கெதிரான வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன.

இதனைக் கட்டுப் படுத்தும் முயற்சிகள் எடுக்கப்பட முன்னரே நாட்டின் பிறபகுதிகளுக்கும் அது பரவியது.

இந்த வன்முறைச் சம்பவங்கள் தொடர்பான நீதி விசாரணைகள் எதுவும் ஒழுங்காக நடாத்தப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்படவில்லை.

செம்மணி, பிந்துநுவெவ போன்ற படுகொலைகள் மீதான விசாரணைகளுக்கு ஏற்பட்ட கதியே இதற்கும் நேர்ந்துள்ளது.

மஹிபால ஹேரத் என்ற ஓர் அமைச்சர் மாவனல்லை சம்பவங்களுக்குப் பின்னணியில் இருப்பதாக குற்றஞ்சாட்டப்பட்ட போதும் அவர் மீது நடவடிக்கை ஏதும் எடுக்கப் படவில்லை. மாறாக அவர் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வருவதற்கான முயற்சிகளே எடுக்கப்படுகின்றன.

இவ்வாறு முஸ்லீம் சமூகத்தின் மீது அவிழ்த்து விடப்பட்ட இனவாத நடவடிக்கைகள் தொடர்பாக நடவடிக்கை ஏதும் எடுக்கப்படாத நிலையில், கரையோர மாவட்டம் ,கட்சிப்பிளவு என முஸ்லீழ் சமூகம் சிதறுண்டு நிற்பதால் உண்மையில் இனவாதிகளுக்கே பயன் கிடைக்கும்.

தம் மீதான இனவாத ஒடுக்கு முறைகளுக்கு எதிராக தீர்மானகரமான முடிவு ஏதும் எட்டப்படாத நிலையில் முஸ்லீம் சமூகம் வேறு ஏதோ கோரிக்கைகளுக்காக போராடுவதானது அவர்களை திசை திருப்பி விடுவதில் இனவாதிகள் பெற்றுவிட்ட வெற்றியையே காட்டுகிறது.

இத்தகைய ஆபத்துக்கள் குறித்து முஸ்லீம் சமூகம் மிகவும் விளிப்பாக இருக்க வேண்டிய தருணமிது.

முஸ்லீம் சமூகத்தின் பிரதிநிதிகள் தாம் என அவர்களது வாக்குகளைப் பெற்றுக் கொண்டவர்கள், இது குறித்துச் சிந்திக்க வேண்டிய கடப்பாடு உடையவர்களாகின்றனர்.

# மட்டக்களப்பில் இந்து மதம் அழிந்து போகிறது

## -சுவாமி தந்திரதேவா கவலை-

**16**.06.2001 சனிக்கிழமை மட்./நாவற்குடாவில் அமைந்துள்ள இந்து கலாசார மண்டபத்தில் இந்து ஆலயங்களின் தலைமை ஒன்றியமும், இந்து இளைஞர் பேரவையும் இணைந்து நடத்திய "இந்து மத மேம்பாட்டு மாநாடு" இந்து இளைஞர் பேரவைத் தலைவர் சீ.யோகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. இதில் பல இந்து அன்பர்கள் உரை ஆற்றினார்கள். காலை அமர்விற்குப் பின் மாலை நிகழ்ச்சிகளில் ஆன்மீகத் துறவி ஸ்ரீமத் சுவாமி தந்திர தேவா அவர்களின் 51வது பிறந்த தின வாழ்த்து வழங்கல் நிகழ்வுகளும் நடைபெற்றது. இந் நிகழ்வுகளில் மட்/பிரதேச செயலாளர் கதிர்காமநாதன் அவர்கள் இன்றைய சூழ்நிலையில் ஆலயங்களில் அதிக வருமானம் கிடைப்பதால் நிதி மோசடிகள் நடைபெறுவதாகவும் இது சம்பந்தமான நிகழ்வுகளை தமக்கு கிராம மக்கள் தொடர்ந்து அறிவித்து வருவதாகவும் இதில் இந்து ஆலயங்களின் ஒன்றியம் தலையீடு செய்து சிறப்பாக பிரச்சினைகளை முடித்து வைத்துள்ளதாகவும் குறிப்பிட்டார். அத்துடன் இன்று மதமாற்றம் நடைபெறுவிதற்கு இந்துக்களின் வறுமை நிலையே காரணம் என்றும் சுட்டிக் காட்டினார்.

**கோயில் கட்டவும் கும்பாபிஷேகம் செய்யவும் பல இலட்சம் ரூபா செலவு செய்வதை விட ஏழை மாணவரின் கல்வி மேம்பாட்டுக்குப் பணத்தைச் செலவிடலாம். வறுமையில் வாடும் மக்களுக்கு உதவலாம்.**

சுவாமி தந்திரதேவா மகராஜ் அவர்கள் உரையாற்றும் போது மட்டக்களப்பில் இந்து மதம் அழிந்து போகிறது. மட்டக்களப்பில் என்னுடைய எட்டு வருட அனுபவத்தில் எழுபத்தி இரண்டுக்கு மேற்பட்ட கிராமங்களுக்கு விஜயம் செய்திருக்கின்றேன். அங்கு பல அறநெறிப் பாடசாலைகளையும் அவர்களுக்கான உதவிகளையும் செய்து வந்திருக்கின்றேன். இன்னும் இவர்களது விழிப்புணர்வுக்காக பல இந்து மத புத்தகங்களை பிரசுரம் செய்து விநியோகித்து வருகின்றேன். இருந்தும் இவர்கள் இந்து மதத்தில் இன்னும் அக்கறை கொண்டவாகளாகக் காணப்படவில்லை. அவ்வாறு அக்கறை கொண்டிருந்தால் இது போன்ற இந்து மாநாடுகளுக்கு பெருந்திரளான மக்கள் வந்திருப்பார்கள்.

**·தொகுப்பு:-**
**டாக்டர்.எம்.கந்தசாமி**

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு மட்டும் கிட்டத்தட்ட 12,000 அப்பியாசக் கொப்பிகள் விநியோகம் செய்திருக்கிறேன். இதில் பயனடைந்தவர்கள் எத்தனை பேர்! இங்கு வந்திருக்கிறார்களா?" என்று கேள்வி எழுப் பினார். எனக்கு முன் பேசிய பிரதேச செயலாளர் என்னை மன்னிக்க வேண்டும். அவர் பேசும் போது கூறினார். இந்துக்கள் வறுமை காரணமாக மதம் மாறுகிறார்கள் என்று. அவருக்கு ஒரு உண்மை தெரிய வேண்டும். நான் வாழும் திருமலை மாவட்டத்தில் ஒரு முஸ்லீம் கிராமத்தில் மிகவும் வறுமையான சில முஸ்லீம் பெண்கள் நாளாந்தம் பிச்சை எடுத்து வாழ்கிறார்கள். ஆனால் அவர்கள் இந்து மதத்தையோ கிறிஸ்தவ மதத்தையோ சேரவில்லை ஏன்? அவர்களுக்குத் தங்கள் மதம் முக்கியம். மதத்தை அவர்கள் விட்டுக் கொடுக்க மாட்டார்கள். அப்படியிருக்கும் போது இந்துக்கள் மட்டும் பிற மதத்தை நாடிப் போகலாமா? இதற்கு யார் காரணம்? என்று கேள்வி எழுப் பினார்.

இன்று மட்டக்களப்பில் இந்து மதப் பிரசார இயக்கம் இருக்கிறதா? ஆலயங்களில் தர்ம கர்த்தாக்கள் இந்து மதக் கொள்கை பற்றி பேசுகின்றார்களா? சமய குரவர்கள், ஆழ்வார்கள், உபநிடதங்கள், அத்வைதங்கள், தேவார திருப் பதிகங்களை ஓதுகிறார்களா? பண்ணிசை ஆலயங்களில் ஓதப்படுகின்றதா? இல்லை. ஏன் இந்த நிலை. இவர்களுக்குப் பணம் வேண்டும். பதவி வேண்டும். அவ்வளவுதான். பணம் கூடினால் கோயில் கட்டுவார்கள். அது பிடிக்கவில்லை என்றால் இடிப்பார்கள். இன்னுமொரு கோயில் கட்டுவார்கள். இதற்கு காரணம் பண மோசடி, கையாடல் இவர்கள் இந்து மதத்தைப் பரப்ப வேண்டும். பணத்தை ஏழை எளிய மாணவ சமுதாயத்துக்கு வழங்கி அவர்களின் கல்வி மேம்பாட்டைச் செய்ய வேண்டும். மத சம்மந்தமான புத்தகங்கள் வெளியிடப்பட வேண்டும். இவை இன்று மட்டக்களப்பில் இல்லை. இதனால் என்ன நடக்கப் போகிறது. கோயிலைக் கட்டி பல இலட்ச ரூபாய்களை குருக்களுக்குக் கொடுப்பதினாலும் என மதப் பிரச்சாரத்திற்கும் மத சம்மந்தமான புத்தக வெளியீடுகளுக்கும் பயன்படுத்த முன் வர வேண்டும்.

அடுத்து மக்கள் இந்து மதத்தை அனுசரித்துச் செல்ல வேண்டும். இந்த மதக் கோட்பாடுகளைக் கடைபிடிக்க வேண்டும். எமது கலாசாரங்களை நாம் கட்டிக் காக்க வேண்டும். நான் இன்று கதர் துணி அணிந்து வந்திருக்கிறேன். ஆனால் பல இந்துக்கள் கோயிலுக்குச் செல்லும் போது காற்சட்டை அணிந்து செல்கிறார்கள். ஏன் இவர்கள் வேதக்காரர்களா? வேட்டி அணிந்து செல்வதால் இவர்களுக்கு தரக் குறைவு ஏற்படுகிறதா?

மட்டக்களப்பில் பசுவதை நடைபெறுகின்றது. என் இந்துக்கள் இதை உண்ண வேண்டும்? இதை இங்குள்ள இந்து அமைப்புக்கள் ஏன் தடை செய்ய முடியாது? இந்தியாவில் மச்சம் சாப்பிடுவார்கள். ஆனால் பசுவதை செய்து சாப்பிடமாட்டார்கள். இந்நிலை இங்கும் கொண்டு வரப்படல் வேண்டும்.

இன்று சைவமக்கள் இந்துக்கள் பாதை மாறிச் செல்வதை தடுக்க வேண்டும். அவர்களைத் திருத்தி இந்து மதத்தில் பற்று உள்ளவர்களாக மாற்ற வேண்டும். இதை இந்து அமைப்புக்கள் செய்ய வேண்டும். எம்மதமும் சம்மதம் என்ற சாட்டுக் கொள்கை மாற்றப்படல் வேண்டும். எம்மதமும் சம்மதம் என்று கூறி இந்து மதத்தவர்கள் வேறு மதத்திற்கு சேர்ந்து விட்டால் மற்ற மதங்கள் வாழ நம் மதம் மட்டும் அழிந்து விட வாய்ப்புண்டல்லவா? எனவே இந்து மதம் எம்மதம் என்று நம்மை நாமே மாற்றிக் கொள்ள வேண்டும். அப்போதுதான் இந்து மதம் வளர்ந்து மேலோங்கும்.

ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே விஞ்ஞானம் வளர்ச்சியடையாத காலத்தில் பல தத்துவங்களைக் கூறி வைத்த ஒரே ஒரு மதம் இந்து மதமே. இதனை இந்து மத தர்மகர்த்தாக்களும் இந்து ஆலய ஒன்றியமும், இந்து அமைப்புக்களும் செய்ய முன் வர வேண்டும். இல்லை என்றால் எத்தனை தந்திரதேவாக்கள் வந்தாலும் இந்து மதத்தின் அழிவை மட்டக்களப்பில் இருந்து காப்பாற்ற முடியாது என்றார்.

அன்னாரின் 51வது பிறந்தநாளில் இது உறுதிசெய்யப்படவேண்டும் என்னும் கொள்கை யாராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவரது சேவை நலம் பற்றி கவிதைகளும் நன்றியுரைகளும் பாடப்பட்டன.

ஈற்றில் மட்டக்களப்பு இந்து ஆலயங்களின் ஒன்றியம், இந்து இளைஞர் மன்றத்தின் சார்பில் அதன் ஆலோசகர் டாக்டர் எம். கந்தசாமியினால் சுவாமி தந்திரதேவ மகராஜ்க்கு பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

# ஒரே குடும்பத்தில் இரு ஆசிரிய சகோதரர்கள் விசாரணையின்றி தடுத்து வைப்பு

**மனித உரிமை ஆணைக்குழு, தமிழர் ஆசிரிய சங்கத்திடமும் முறைப்பாடு**

(காரைதீவு நிருபர்)

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரு சகோதரர்கள் விசாரணையின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இருவரும் ஆசிரியர்கள் ஆவர்.

பொத்துவிலைச் சேர்ந்த கைலாயபிள்ளை ராமு (வயது 31) கைலாயபிள்ளை சதீஸ் (வயது 23) ஆகியோரே பொலிஸாரால் கைதாகி தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் ஆவர்.

இவர்களது விசாரணையை துரிதப்படுத்தி விடுதலை செய்ய உதவுமாறு மனித உரிமைகள் ஆணைக்குழுவிடமும், இலங்கை தமிழர் ஆசிரிய சங்கத்திடமும் பெற்றோர் முறைப்பாடு செய்துள்ளனர்.

பட்டதாரி ஆசிரியரான ராமு திருமணமான இளம் குடும்பஸ்தர் பொத்துவிலில் மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் கற்பித்துக் கொண்டிருக்கும் போது கல்கிஸ பொலிஸாரால் 27-10-2000 இல் கைது செய்யப்பட்டார்.

27-10-2001 இல் பூஸா தடுப்பு முகாமிற்கு அனுப்பப்பட்டு இன்று வரை விசாரணையின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அவரது தம்பி கை.சதீஸ் பொத்துவில் வீட்டிலிருக்கும் போது 20-11-2000 இல் கைது செய்யப்பட்டு களுத்துறை பூஸா முகாமில் விசாரணையின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

# ஒப்பீட்டு முறையைத் தவிர்த்து கணிப்பீடு நடைமுறைப்படுத்தல்

(பழுகாமம் நிருபர்)

ஆரம்ப தரங்களில் கணிப்பீடு நடைமுறைப்படுத்துவது தொடர்பாக பட்டிருப்பு வலயக் கல்வி அலுவலகத்தினால் சுற்று நிருபம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:- ஆரம்ப தரங்களில் கணிப்பீடுகளை நடைமுறைப்படுத்துவதில் எமது வலயப் பாடசாலைகள் பல பொதுப் பரீட்சைகளை நடத்தி அதற்கான புள்ளிகளையும் பதிவேடுகளில் பதிவு செய்து மாணவர் தேர்ச்சி அட்டைகளும் வழங்கப்பட்டுள்ளதையும் அறிகிறோம்.

எனவே இவ்வாறான நடைமுறையில் இருந்து விடுபட்டு புதிய கல்விச் சீர்திருத்தத்துக்கு அமைவாக கணிப்பீடுகளை மேற்கொள்வது இன்றியமையாத தாகும்.

தரம் ஒன்றிற்கு இரண்டு தவணைகளிலும் முறை சார் எழுத்து மூலக் கேள்வித் தாள்கள் பாடசாலைகளில் இடம்பெற மாட்டாது. • மூன்றாவது தவணையில் எழுத்துப் பரீட்சைகள் இருப்பின் வகுப்பாசிரியர்களால் தயாரிக்கப்பட்ட கேள்வித் தாள்களே பயன்படுத்தப்பட வேண்டும். ஒவ்வொரு முதன்மை நிலை இறுதியிலும் ஆகக் குறைந்தது அத்தியாவசியத் தேர்ச்சிகளிலாவது ஒரு வகுப்பின் சகல பிள்ளைகளும் புலமை மட்டத்தை எய்த வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஒரு பிள்ளையின் அடைவு மட்டத்துடன் இன்னொரு பிள்ளையின் அடைவு மட்டத்தை ஒப்பிட்டுப் பார்க்கும் பழக்கத்தில் இருந்து ஆசிரியர் தடை செய்யப்படுவர்கள். ஒரு பிள்ளையின் அடைவு மட்டம் திட்டமான கற்றல் வெளிப்பாட்டுடன் அல்லது முன்னைய அடைவு மட்டத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கப்படும் என்பதை தங்களுக்கு வலியுறுத்துகின்றோம்.

இச்சுற்று நிருபம் வலயக் கல்விப்பணிப்பாளர் க.இராசநாயகம் அவர்களால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

# இனவாதச் சக்திகளை ஓரங்கட்டாத வரை நிரந்தர சமாதானம் காணமுடியாது

## -அலிஷாஹிர் மௌலானா

(ஏறாவூர் நிருபர்)

இந்த நாட்டில் வாழும் பெரும்பான்மை சிங்கள சமூகம் இனவாதச் சக்திகளை இனங் கண்டு ஓரங்கட்டாத வரை நிரந்தர சமாதானத்தையோ அமைதியையோ காணமுடியாதென மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் அலிஷாஹிர் மௌலானா தெரிவித்தார்.

வாழைச்சேனை காவத்தை முனையில் இடம்பெற்ற பொதுமக்கள் சந்திப்பொன்றின் போது அவர் இதனைக் கூறினார்.

இந்த நாட்டில் கடந்த 10 வருட காலமாக சமூகங்களிடையே மோதலை ஏற்படுத்த இனவாத சக்திகள் முயற்சித்து வருகின்றன. விஷமிகளுக்கு எவரும் அடி பணியக் கூடாது.

பிந்துநுவெவ புனர்வாழ்வு முகாம் மற்றும் மாவனல்லை முஸ்லீம்கள் மீது நடாத்தப்பட்ட தாக்குதலும் இனவாதக் கும்பலின் செயற்பாடாகும். இதே போன்று வடக்கு கிழக்கு மாகாணத்தில் 1985ம் ஆண்டிற்குப் பின்னர் தமிழ் மற்றும் முஸ்லீம் சமூகங்களுக்கிடையே பிரிவினையை ஏற்படுத்தி புரிந்துணர்வை இல்லாமல் செய்ய பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் மௌலானா எம்.பி குறிப்பிட்டார்.

கடந்த இரண்டு தசாப்த காலமாக எமது நாட்டிலே உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது. இதனால் எமது தேசத்தின் பல்லாயிரக் கணக்கான உயிர்கள் அழிகின்றன. ஆயிரக்கணக்கான பெண்கள் விதவைகளாக்கப்படுகிறார்கள். பிள்ளைகள் அநாதைகளாக்கப்படுகிறார்கள். இலட்சக் கணக்கான குடும்பங்கள் அகதி வாழ்க்கை வாழ்கிறார்கள். இந்த நிலை நீக்கப்பட வேண்டும். அது வரை சோதனைகளும் வேதனைகளும் எம்மால் தவிர்க்க முடியாத தொன்றாகவே இருக்கும்.

எனவே நிரந்தர அமைதிக்காகவும் சமாதானத்திற்காகவும் அர்ப்பணம் செய்ய வேண்டியது ஒவ்வொருவரினதும் கடமை என்றார்.

காவத்தை முனைச் சம்பவத்தில் மரணமானவர்களது குடும்ப உறவினர்களுக்கும் காய மடைந்தவர்களுக்கும் மௌலானா எம்.பி ஆறுதல் கூறினார்.

# துண்டுப்பிரசுரம் விநியோகித்த ஜே.வி.பி உறுப்பினர் தாக்கப்பட்டார்

(நமது நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில் துண்டுப்பிரசுரம் ஒன்றினை விநியோகித்த ஜே.வி.பி உறுப்பினர் ஒருவர் இனந் தெரியாதோரினால் பலத்த தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார்.

அம்பாறை மாவட்டத்தை இன அடிப்படையில் பிரிப்பதை ஜனதா விமுக்தி பெரமுன எதிர்க்கிறது என இத்துண்டுப்பிரசுரத்தில் குறிப்பிட்டிருந்ததாகக் கூறப்படுகிறது.

அரசியல் கட்சி ஒன்றில் முக்கிய உறுப்பினர் ஒருவர் துண்டுப்பிரசுரத்தை விநியோகித்தவரிடம் பறித்தெடுக்க முயன்றபோது மூண்ட பிணக்கினால் இவர் தாக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

# பாடசாலை மட்டத்தில் பாரம்பரியக் கலைப் போட்டிகள்

(கல்லாறு நிருபர்)

மண்முனை தென் எருவில் பற்று கலாசார பேரவை பாரம்பரியக் கலைகளுக்கு புத்துயிர் அளிக்கும் வகையில் பாடசாலை மட்டத்திலும் பொதுவாகவும் போட்டிகளை நடாத்துவதற்கு விண்ணப்பங்களை கோரியுள்ளது. விண்ணப்ப முடிவுத் திகதி இம்மாதம் 30ம் திகதியாகும்.

பாடசாலை மட்டத்தில் கிராமிய நடனம், கோலம் இடுதல், சரம் கோர்த்தல், எண்ணெய்ச் சிந்து பாடுதல் என்பவற்றில் போட்டிகள் இடம்பெறும்.

பொதுப் போட்டிகளாக நாட்டார் பாடல், நாட்டுக் கூத்து (வடமோடி மரபு வழி) சமூக நாடகம், வசந்தன் கூத்து என்பன அறிவிக்கப்பட்டுள்ளன.

இப்போட்டிகள் அனைத்தும் ஜூலை மாதத்தில் நடைபெறவிருக்கிறது. ஜூலை 2ம் வாரத்தில் பாடசாலை மட்டப் போட்டிகளும் பொதுப் போட்டிகள் ஜூலை 3ம் வாரத்திலும் ஆரம்பமாகும்.

போட்டி நிகழ்ச்சிகள் அரசியல் கலப்பற்றவையாக அமைய வேண்டும்.

# ஆலய உண்டியலை உடைத்தவர் சிக்கினார்

(கல்லாறு நிருபர்)

கடந்த புதன் நள்ளிரவு பெரிய கல்லாறு மடத்தடி விநாயகர் ஆலயத்தில் உள்ள உண்டியல் உடைப்பு முயற்சி ஊர் மக்களால் முறியடிக்கப்பட்டுள்ளது.

புதன் நள்ளிரவு இனந் தெரியாத நபர் ஒருவர் மேற்படி ஆலயத்தில் உள்ள உண்டியலை உடைக்கும் சத்தம் கேட்டு அயலவர்கள் விழிப்படைந்துள்ளனர். உடனே இது குறித்து தொலைபேசி மூலம் நிர்வாகத்தினர் ஒருவருக்கு அறிவித்துள்ளனர். அவர் ஏனையோருக்குத் தொலைபேசி மூலம் அறிவித்து அனைவரும் ஆலயத்தை சூழ்ந்து கொண்டு பொது மக்களையும் ஒலிபெருக்கி மூலம் அழைத்துள்ளனர்.

உண்டியலை உடைத்துக் கொண்டிருந்தவர் ஓடித்தப்ப முயன்றும் முடியாது ஊர்மக்களிடம் பிடிபட்டுள்ளார். இவரை எச்சரித்தும் அவரிடம் எந்த தகவலையும் பெற முடியாத நிலையில் கிராம சேவக உத்தியோகத்தர் க.சதானந்தத்தின் உதவியுடன் கல்லாறு பொலிஸ் காவல் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

இவர் அளித்த தகவல்கள் முரண்பட்டு காணப்படுவதாகவும், சித்த சுவாதீனமுற்றவர் போல் இவர் நடிப்பதாகவும் ஊர் மக்கள் தெரிவித்தனர்.

# முன்னாள் வலயக் கல்விப்பணிப்பாளருக்குப் பிரியாவிடை வைபவம்

(நமது நிருபர்)

சேவையிலிருந்து ஓய்வு பெற்ற முன்னாள் கல்குடா வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.சி. நர்கேந்திரன் அவர்களுக்கு ஏறாவூர்பற்று-2 கல்விக் கோட்டத்தில் உள்ள அதிபர்களும், கோட்டக் கல்வி அதிகாரி திரு.இ. வேலுப்பிள்ளையும் இணைந்து பிரியாவிடை வைபவம் ஒன்றினை நேற்று 18.06.2001 திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு மட்/செங்கலடி மத்திய கல்லூரியில் நடாத்தியுள்ளனர்.

# பேரியல், ஹிஸ்புல்லாவை இணைக்க கோரி கையெழுத்துப் போராட்டம்

(காத்தான்குடி நிருபர்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் பீடத்தில் அமைச்சர் பேரியல் அஷ்ரஃபையும், முன்னாள் பிரதி யமைச்சர் எம்.எல்.ஏ எம்.ஹிஸ் புல்லாஹ் வையும் இணைத்துக் கொள்ளுமாறு கோரும் 1 இலட்சம் கையொப்பங்கள் திரட்டும் போராட்டம் நேற்று (18-06-2001) காலை காத்தான் குடியில் ஆரம்பிக்கப்பட் டுள்ளது.

பெருந் தொகையான இளைஞர்களும், முக்கியஸ்தர்களும் கையெழுத்திடுவதற்காக நீண்ட கியூவரிசையில் காத்துநின்றதை அவதானிக்க முடிந்தது. ½ மணி நேரத்துள் 2000 க்கும் அதிகமான மக்கள் கையெழுத்திட்டதாக முஸ்லிம் காங்கிரஸ் மத்திய குழு உறுப்பினர் எம். எம்.ஜெனபர் தெரிவித்தார்.

இக்கையெழுத்துப் போராட்டம் திருமலை, அம்பாறை மாவட்டத்திற்கும் விஸ்தரிக்கப்படவுள்ளது. சேகரிக்கப்படும் ஒரு லட்சம் கையொப்பங்களும் முஸ்லிம்காங்கிரஸ் தலைவர் அமைச்சா றஊப்ஹக்கீமுக்கு அனுப்படுமென அவர் மேலும் தெரிவித்தார்.

# இரண்டு கோடி ரூபா செலவில் கோமாரிக்கு மின்சாரம்!

(காரைதீவு நிருபர்)

அம்பாறை மாவட்டத்தின்பின் தங்கிய பிரதேசமான கோமாரிக் கிராமத்திற்கு வரலாற்றில் முதற்தடவையாக மின்சாரம் கிடைக்கவுள்ளது.

இதற்கென 1 கோடி 9 லட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்ய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றுள்ளார்.

கனேடிய சர்வதேச அபிவிருத்தி நிதியம் (சீடா)இதற்கு நிதியொதுக்க முன்வந்துள்ளது.

இதற்கான கட்டுமான வேலைகள் யாவும் வருட இறுதியில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் குணசேகரம் சங்கர் பல மாதங்களாக எடுத்த முயற்சியின் பலனாக இம் மின்சார விநியோகம் கிடைக்கவிருப்பது குறிப்பிடத்தக்கது.

கோமாரி மின்சார இணைப்பிற்கு உத்தேச மதிப்பீட்டு வேலைகளைச் செய்யுமாறு இலங்கை மின்சாரசபைத் தலைவருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அவர் வட-கிழக்கு மாகாண மின்சார சபை பிரதி பொது முகாமையாளருக்கு மதிப்பீட்டிற்கான உத்தரவைப் பிறப்பித்துள்ளார். வருட இறுதியில் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு 2002 ஜனவரியில் கோமாரிக்கு மின்சாரம் கிடைத்துவிடுமென சங்கர் எம்.பி. கூறினார்.

# மனவளர்ச்சி குன்றிய சிறுவர்களின் கலை விழா

(நமது நிருபர்)

கொழும்பு லயன்ஸ் கழகம் நடாத்தும் மனவளர்ச்சி குன்றிய சிறுவர்களுக்கான பாடசாலையின் ஆண்டு விழா 16-06-2001 வெள்ளவத்தை இராமகிருஷ்ணமிசன் மண்டபத்தில் லயன்ஸ் கழக தலைவர் எஸ்.சிவானந்தன் தலைமையில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக கொழும்பு மாநகர மேயர் ஜனாப் ஓமார் காமின் அவர்கள் கலந்து கொண்டார். கௌரவ விருந்தினராக இராமகிருஷ்ண மிசன் தலைவர் சுவாமி ஆத்மகணானந்தஜீ மகராஜ் பேசுகையில் சிறப்பாக இயங்கி வரும் இப்பாடசாலையை நடாத்துபவர்களும் அங்கு கற்பிக்கும் ஆசிரியர்களினதும் சேவை மகத்தானது. இச்சிறுவர்களுக்கு உதவ அனைவரும் முன்வரவேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

சிறப்பு விருந்தினராக ஆலோசகர் எஸ்.மனோகரன், ஈ.டி.எஸ். செயலாளர் ச.சந்திரகுமார் கலந்து கொண்டு உரையாற்றினார்கள்.

மாணவர்களின் சிறப்பு நிகழ்ச்சியாக மட்டக்களப்பு அன்னை கிருஷ்ணா மாணவர்களின் சிறப்புக் காவடியாட்டம் இடம் பெற்றது. மிலேனியம் பாடசாலைப் பொறுப்பாளர் எஸ்.சிவகுமார் நன்றியுரை வழங்கினார். நிகழ்ச்சிகளை கமலினி செல்வராஜா தொகுத்து வழங்கினார்.

# ரூ.7 லட்சம் கேட்டு கர்நாடக எம்.எல்.ஏ.வுக்கு வீரப்பன் மிரட்டல் கடிதம்

ரூ7 லட்சம் கேட்டு கர்நாடக எம்.எல்.ஏ.வுக்கு வீரப்பன் மிரட்டல் கடிதம் விடுத்துள்ளான்.


சத்தியில் இருந்து தமிழ்நாடு எல்லை அடுத்து 50 கி.மீ. தொலைவில் உள்ளது சாம்ராஜ் நகர். இங்குள்ள தொகுதி எம்.எல்.ஏ.வாக இருப்பவர் குருசாமி. இவர் பா.ஜ.கவை சேர்ந்தவர். இவருக்கு கடந்த 5 நாட்களுக்கு முன் ஒரு மர்ம மிரட்டல் கடிதம் வந்தது. இந்த கடிதம் கன்னடத்தில் எழுதப் பட்டு இருந்தது. இது சந்தன வீரப்பன் அல்லது அவனது கூட்டாளியிடம் இருந்து வந்த தாக கூறப்படுகிறது. கடிதத்தில் கூறப்பட்டு உள்ள தாவது:-

ரூ.7 லட்சம்

எம்.எல்.ஏ. அவர்களுக்கு தாங்கள் சம்பந்தப்பட்டுள்ள தகராறை நான் தீர்த்து வைக் கிறேன். எனக்கு ரூ.7 லட்சம் தேவைப்படுகிறது. உடனே பணத்தை தாளபுரா என்ற மலையில் உள்ள மாதேஸ்வரன் கோவில் பூசாரி உள்ள அறை யில் வைத்து விடவும். இதை விடுத்து போலீசுக்கு தகவல் கொடுத்தால் விபரீத விளைவு களை சந்திக்க நேரிடும். பணத் துடன் வாட்டல் நாகராஜ் (முன்னாள் எம்.எல்.ஏ.) முகவரி யும் எழுதி வைத்திருக்க வேண்டும். இந்த கடிதம் பேவி தாளபுரா ஊரில் உள்ள தபால் அலுவலகத்தில் போஸ்டு செய்யப் பட்டு உள்ளது. இது கடந்த 11-ந்தேதி எம்.எல்.ஏ. குருசாமி கைக்கு கிடைத்து உள்ளது. நேற்று முன்தினம் தான் சாம்ராஜ் நகர் போலீஸ் சூப்பிரண்டு அன்னேக வுடா விடம் கடிதத்தை கொடுத்து புகார் செய்யப்பட்டது.

பாதுகாப்பு

இதைத் தொடர்ந்து எம்.எல்.ஏ. வீட்டுக்கு பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப் பட்டு உள்ளது. இதுதொடர்பாக வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகிறார்கள்.





உறவுகளை குண்டுகளுக்குப் பலிகொடுத்து விட்டு, பிணக்குவியல்களிடையே, உடல்தேடும் கொடூரம் இங்கு மட்டுமா? அண்மையில் பங்களாதேஷ் நாட்டில், ஆளும் அவாமி கட்சியின் கூட்டமொன்றில் மேசைக்க டியிலிருந்து வெடித்த குண்டு ஒன்றினால் பலியான 21 பேரினது சடலங்களிடையே, தனது சகோதரனின் சடலத்தை ஒருவர் தேடுகின்ற உருக்கமான காட்சியையே இங்கு காண்கிறீர்கள்

## உலக வலம்

தொகுப்பு :- பௌஸி





இந்திய ஒஸ்கர் விருது வழங்கும் நிகழ்வு, தென்னாபிரிக்காவில் நடைபெற்ற போது, விருது பெற்ற கலைஞர், ஹிரிதிக் றொஷான்(வலது), மற்றுமிரு கலைஞர்களுடன் நிற்பதனையும், நிகழ்வில் கலந்து கொண்ட உலக அழகி பிரியங்கா சோப்ராவையும் இங்கு காண்கிறீர்கள்

# ஆலய நிகழ்வுகள்

## காயத்ரி சித்தரின் வருகை

(எம்.உ.கந்தீபன்)

கடந்த 16.10.2001 (சனிக்கிழமை) மு.ப. 11.00 மணியளவில் ஸ்ரீலங்காதீஸ்வரர் ஆலய ஸ்தாபகர் காயத்ரி சித்தர் கலாநிதி ஆர்.கே.முருகேசு சுவாமி அவர்கள் அண்மையில் கும்பாபிஷேகம் கண்ட, கல்முனை ஸ்ரீ சந்தான ஈஸ்வரர் (சிவன்) ஆலயத்துக்கு வருகை தந்தார். அன்று விசேட பூஜையும் காயத்ரி சித்தரின் ஆன்மீக அருளுரையும் ஆசிர்வாதமும் இடம்பெற்றது. இவ் ஆலயத்துக்கு அடிக்கல் வைத்தவர் காயத்ரி சித்தர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## மணிக்கோபுர கலசாபிஷேகமும் வருடாந்தஉற்சவமும்

(எம்.உ.கந்தீபன்)

கல்முனை யாட் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ ஐயனார் தேவஸ்தானத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மணிக்கோபுர கலசாபிஷேகம் விசு வருடம் 2001 யூன் மாதம் 22ம் திகதி உதயத்தில் மிக விமரிசையாக நடைபெறவுள்ளது. இந் நிகழ்ச்சி சிவஸ்ரீ சச்சிதானந்த குருக்கள் ஆலய பிரதம அர்ச்சகர் சிவ ஸ்ரீ யோகச்சந்திரன் குருக்கள் ஆகியோரின் தலைமையில் நடைபெறவுள்ளது. இவ் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் 19.06.2001 (செவ்வாய்) மிக விமரிசையாக ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து 10 நாட்கள் அலங்கார அபிஷேகமும், திருவிழாவும் இடம்பெற்று 28.06.2001 (வியாழன்) ஆனி உத்திர சுப மூர்த்தத்தில் விசேட சமுத்திர தீர்த்தம் நடைபெற்று பொன்னூஞ்சலுடனும், அம்மன் சடங்குடனும் உற்சவம் நிறை வேறுமென்று ஸ்ரீ ஐயனார் தேவஸ் தான செயலாளர் பெ.நடராஜா தினக்கதிருக்கு தெரிவித்தார்.

## அந்தோனியார் திருநாளில் சமாதானப் பிரார்த்தனை!

(கல்லடி)

"நமது மக்கள் அனைவரும் சமாதானத் தாகத்தால் தவியாய்த் தவிக்கின்றனர். அன்றாட அவலங்களை எதிர்நோக்கின்றனர். அற்புதராகிய புனித அந்தோனியார் தமது கோடானு கோடி அற்புதங்களினால் தாகத்துக்குத் தண்ணீரும், அவஸ்தைகளுக்கு ஆறுதலும் தந்து இரட்சிப்பவர். அப்புனிதர் நம் மக்களின் சமாதானத் தாகத்தை தீர்த்தும், அவலங்களைப் போக்குவார். அவரை அண்டி வாழ்வோம். இவ்வாறு மட்டக்களப்பு புது முகத்துவாரம் புனித இஞ்ஞாசியார் தேவாலயப் பங்குத் தந்தை அருட்திரு ஜோசப் மேரி அடிகளார் கடந்த புதன் கிழமை மாலை கல்லடி - புதுமுகத்துவாரச் சந்தி புனித அந்தோனியார் திருச் சொரூபத் திருத்தலத்தில் நடந்தேறிய அந்தோனியார் திருநாள் வைபவத்தில் மறையுரை நிகழ்த்திய போது குறிப்பிட்டார்.

இத் திருநாளையொட்டி அருட் திரு. ஜோசப் மேரி அடிகளாருடன் மட்டக்களப்பு மறைமாவட்ட இயேசு சபைத் தலைவர் அருட்திரு போல் சற்குணநாயகம் அடிகளார், புளியந்தீவு புனித மரியன்னை தேவாலயப் பங்குத் தந்தை அருட்திரு தேவராஜா அடிகளார் ஆகியோர் கூட்டுத் திருப்பலி பூசை ஒப்புக்கொடுத்தனர். அங்கு மறையுரை நிகழ்த்திய மேற்படி வண.பிதாக்கள் அனைவரும், "நாட்டின் இனப்பிரச்சினை குறித்து தேவநற்கருணை வேண்டிப் பிரார்த்தித்ததுடன், மக்களும் எரியும் நெருப்பில் எண்ணைய் வார்க்காமல் தேவ கட்டளை வழி நின்று ஒருவரை ஒருவர் ஆதரித்து, தவறுகளை மன்னித்து சமாதானத்தை நேசிக்க வேண்டும், பகைமையைத் தவிர்த்து நட்பைப் பலப்படுத்திக் கொள்ள வேண்டும் என அருளாசி வழங்கினர் கடந்த வருடங்களை விடவும் கூடுதலான அடியார்கள் இம்முறை இத்திருநாளில் அங்கு குழுமியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பண்டாரியாவெளி நாகதம்பிரான் ஆலய பெருவிழா

(அரியம்)

கிழக்கிலங்கையில் பிரசித்திபெற்று விளங்கும் பண்டாரியாவெளி ஸ்ரீ நாகதம்பிரான் ஆலய வருடாந்த மகோற்சவ பெருவிழா எதிர்வரும் 22.06.2001 வெள்ளிக்கிழமை இரவு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும் 29.06.2001 வெள்ளிக்கிழமை தேசத்துப் பொங்கலுடன் நிறைவுறும்.

தொடர்ந்து ஆறு இரவுகளும் முறையே பட்டிப்பளை, அம்பிளாந்துறை, பண்டாரியாவெளி, கடுக்காமுனை, மகிழடித்தீவு, அரசடித்தீவு ஆகிய கிராம மக்களின் திருவிழாக்கள் மிகவும் சிறப்பாக இடம்பெறும். திருவிழாக் காலங்களில் இரவு வேளைகளில் கலை நிகழ்வுகளும் மங்கள வைபவங்களும் இடம் பெறவுள்ளது.

ஆனி உத்தரதினமான எதிர்வரும் 27.06.2001 புதன் கிழமை மகிழடித்தீவு கிராம மக்களின் திருவிழாவுடன் விசேட அபிஷேக ஆராதனை நடைபெறும்.

தேசத்துப் பொங்கல் என மக்களால் அழைக்கப்படும் இவ் வாலயத்தின் இறுதி நாள் பொங்கல் விழா எதிர்வரும் 29.06.2001 வெள்ளிக்கிழமை இடம் பெறுவதையொட்டி களுவாஞ்சிகுடி நியூ ஈஸ்டன் பஸ் கம்பனியினரின் விசேட போக்குவரத்துக்களும், மண்முனை, அம்பிளாந்துறை வாவியில் மேலதிக பாதைச் சேவைகளும் இடம்பெறும்.

## களுதாவளைப் பிள்ளையார் ஆலயக் கொடியேற்றம்

மட்டக்களப்பு பகுதியிலே பிள்ளையார் வழிபாட்டிற்கு பிரபலயமான களுதாவளைப் பிள்ளையார் ஆலயத்தில் இன்று செவ்வாய்க் கிழமை கொடியேற்றத்துடன் வருடாந்த உற்சவம் ஆரம்பமாகின்றது.

ஆனி உத்தர தினத்தை தீர்த்த நாளாகக் கொண்டு அதற்கு முந்திய ஒன்பது நாட்கள் திருவிழாவினையும், பத்தாம் நாள் தீர்த்த நாளாகவும் கொண்டு திருவிழா நடாத்தப்படுகின்றது. அந்த வகையில் எதிர்வரும் 28ஆம் திகதி வியாழக்கிழமை தீர்த்தோற்சவத்துடன் இத் திருவிழா நிறைவடையவுள்ளது. திருவிழாக்காலங்களில் கூட்டு வழிபாடுகள், கதாகாலட்சேபங்கள், கலை நிகழ்ச்சிகளும், அன்னதானமும் இடம்பெறும்.

# தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் புதிய மாணவர் அனுமதி

(நிந்தவூர் நிருபர்.ஐ.எல்.எம்.பாறூக்)

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் புதிய கல்வி ஆண்டுக்காக 297 புதிய மாணவர்கள் அனுமதிக்கப்படவுள்ளனர்.

2000 - 2001, 2001 - 2002 ஆகிய இரு கல்வியாண்டு மாணவர்களும் இம்முறை ஒரே தடவையில் அனுமதிக்கப்படவுள்ளதாகவும், சகல புதிய மாணவர்களுக்குமான வரவேற்பு வைபவம் எதிர்வரும் 23ம் திகதி காலை ஒன்பது மணிக்கு தென்கிழக்குப் பல்கலைக்கழக ஒலுவில் வளாக நூலக மண்டபத்தில் நடைபெற விருப்பதாகவும் பல்கலைக்கழக உதவிப் பதிவாளர் எம்.ஐ.நெளபர் தெரிவித்தார்.

2001-2002 கல்வியாண்டுக்கான பிரயோக விஞ்ஞானங்கள் பீடத்திற்கு அனுமதி பெற்றுள்ள மாணவர்கள் நேற்று 18ம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணி முதல் 10 மணி வரை சம்மாந்துறை பிரயோக விஞ்ஞானங்கள் பீடத்தில் பதிவு செய்யப்பட்டதுடன்,

கலை, கலாசார பீடம், மற்றும் வர்த்தக முகாமைத்துவ பீடம் என்பவற்றிற்கு அனுமதி பெற்றுள்ள மாணவர்கள் எதிர்வரும் 25ம் திகதி காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை ஒலுவில் பல்கலைக்கழக பூங்காவில் பதிவு செய்யப்படுவரெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பதிவு செய்யப்படும் இதே தினங்களில் புதிய மாணவர்களுக்கான துரித ஆங்கில கற்கை நெறிகளும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

எதிர்வரும் 23ம் திகதி நடைபெறும் புதிய மாணவர்களுக்கான வரவேற்பு வைபவத்தில் அனைத்து புதிய மாணவர்களும் தமது பெற்றோர், பாடசாலை அதிபர்கள் சகிதம் பங்கு பற்றுமாறு அழைக்கப்பட்டுள்ளதுடன், இவை தொடர்பான கடிதங்கள் மாணவர்களுக்குத் தனித்தனியே பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் உதவிப்பதிவாளர் நெளபர் மேலும் தெரிவித்தார்.

இந்த வரவேற்பு வைபவத்தில் தென் கிழக்குப் பல்கலைக் கழக உபவேந்தர் எம்.எல்.ஏ.காதர் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வதுடன், பல்கலைக்கழக பீடாதிபதிகள், விரிவுரையாளர்களும் கலந்து கொள்வர்.

## கல்முனையில் அடிப்படை சிங்கள வகுப்புக்கள்

(சாய்ந்தமருது நிருபர்.எம்.காசீம்.எம்.றபீக்)

அரச மொழித்திணைக்கள பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட தமிழ் மொழி மூல அரச ஊழியர்களுக்கான அடிப்படை சிங்கள வகுப்புக்கள் வாரத்தில் வருகிற செவ்வாய், வியாழக்கிழமைகளில் நடைபெறவுள்ளன.

கல்முனை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ள இப்பயிற்சி வகுப்புக்கள் தொடர்பான மேலதிக விபரங்களை பெற விரும்புவோர் பிரதேச செயலாளர் ஏ.எல்.எம்.பளீலிடம் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இப்பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ளும் அரச ஊழியர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படவிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

# அலிக்கம்பை ஒரு பிரிவினர் மீள்குடியேற்றம் ஏனையோர் விரைவில் குடியேற்றப்படுவர்

**அம்பாறை அரசாங்க அதிபர் சிறிவர்த்தன**

(காரைதீவு நிருபர்)

"அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில் பிரிவில் மாத்திரம் சுமார் 1000 குடும்பங் கள் அகதிகளாக உள்ளனர். அவர்களுள் அலிக்கம்பை வனக்குறவர்கள் 224 குடும்பங்களைச் சேர்ந்த 741 பேர் இவ்வாரம் மீள் குடியேற்றப்படவுள்ளனர். பாதுகாப்பு அனுமதி கிடைத்ததும் ஏனையோரும் மீள்குடியேற்றப்படுவார்கள்."

என்று அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் எல்.எஸ்.சி. சிறிவர்த்தன அலிக்கம்பை அகதிகள் மீள் குடியேற்றம் தொடர்பாக அம்பாறைக் கச்சேரியில் இடம் பெற்ற கூட்டத்தில் கூறினார்.

கூட்டத்தில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உள்ளிட்ட பாதுகாப்பு உயரதிகாரிகள், "எகெட்" நிறுவன சேவையாளர்கள், வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் அம்பாறை மாவட்ட முகாமையாளர் கே.பத்மநாதன், பிரதேச செயலாளர்களான எஸ்.அமலநாதன் (திருக்கோவில்), எஸ்.அருள்ராஜா (ஆலையடிவேம்பு) ஆகியோர் கலந்து கொண்டனர்.

அரச அதிபர் மேலும் கூறுகையில்:-

"அகதி வாழ்க்கை வாழ யாருக்கும் விருப்பமில்லை. இருப்பினும் சூழ்நிலை கடந்த 10 வருட காலமாக இடங்கொடுக்க மறுத்ததால் திருக்கோவில் அகதிகள் மீள்க்குடியேற முடியாமல் போய் விட்டது.

தற்போது காலம் கனிந்திருக்கிறது. சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மீள் குடியேற்றத்தை துரிதப்படுத்துங்கள். பிரதேச செயலாளர் முழு மூச்சாக நின்று அரசு வழங்கும் நிவாரணத் தொகைகளை வழங்கி மீள் குடியேற்றத்துக்கு உதவ வேண்டும்.

தற்காலிக கொட்டில் அமைக்க 7000 ரூபாவும், உபகரணங்கள் வாங்க 1000 ரூபாவும் முதலில் வழங்கப்படும்" என்றார்.

### உதவிதேவை

பிரதேச செயலாளர்கள் அங்கு கோரிக்கையொன்றை விடுத்துப் பேசினார்கள்.

"இவ் வசதிகள் மீளக்குடியேறும்போது அவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை யாவது செய்து கொடுக்க வேண்டும்.

வீதி, கிணறு, பாடசாலை அமைத்துக் கொடுத்தல் வேண்டும். இவ்வசதியைச் செய்து கொடுக்காமல் விட்டால் 250 பிள்ளைகள் கல்வி உரிமை மறுக்கப்பட்டு வீதியில் அலைய வேண்டியேற்படும்.

மேலும் அரச சார்பற்ற ஸ்தாபனங்கள் இங்கு வீடுகளை அமைக்க முன்வரவேண்டும். அதற்கும் உதவ வேண்டும் என்று கேட்டார்கள்.

திருக்கோயிலில் மேலும் கஞ்சிகுடிச்சாறு, தங்கவேலாயுதபுரம், சாகாமம் போன்ற பகுதிகளைச் சேர்ந்த 850 குடும்பங்கள் அகதிகளாக இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

# ஒன்றேகால் இலட்சம் நிலுவை பெற இரண்டரை இலட்சத்துக்கு வழக்கு

## -பிரதேச செயலாளர் பளீல் சாட்டை-

(காரைதீவு நிருபர்)

"கல்முனை ப.நோ.கூ. சங்க ஊழியரொருவர் சங்கத்திற்கு செலுத்த வேண்டிய ஒன்றேகால் இலட்சம் ரூபா நிலுவையைப் பெற அப்போதிருந்த இயக்குனர் சபை இரண்டரை இலட்சம் ரூபாவுக்கு வழக்குப் பேசியுள்ளனர். அரசாங்கத்தில் இப்படிச் செய்ய முடியுமா?

இவ்வாறு கேள்வியெழுப்பினார் கல்முனை பிரதேச செயலாளரும் விசேட ஆணையாளருமான ஏ.எல்.எம்.பளீல்,

கல்முனை ப.நோ.கூ.சங்க விசேட பொதுக்கூட்டம் சனியன்று காலை கல்முனை மெதடிஸ்த சபை மண்டபத்தில் நடைபெற்றது.

கல்முனைப் பிராந்திய கூட்டுறவு உதவி ஆணையாளர் கே.எஸ்.ஆனந்தராஜா, கூட்டுறவு பரிசோதகர்களான வி.அரசரெத்தினம், வி.குலசேகரம், ரி.சச்சிதானந்தம் ஆகியோரும் சமூகமளித்திருந்தனர்.

விசேட உரையாற்றிய பளீல் மேலும் கூறியதாவது:-

ப.நோ.கூ.சங்கங்களுக்கு நியமன முறையில் இயக்குனர்களை நியமிப்பதால் நன்மையும் உண்டு, தீமையும் உண்டு.

கல்முனை ப.நோ.கூ. சங்கத்தைப் பொறுத்தவரை நியமன முறையிலான இயக்குனர் சபை முறை பாரிய பாதிப்பை ஏற்படுத்திச் சென்றுள்ளது.

முன்னைய இயக்குனர் சபையால் செய்யப்பட்ட சகல பாதிப்புகளும் பதிவில் உள்ளன. நாம் இருந்த 5 மாத காலத்தில் 12 லட்ச ரூபாவை இலாபமாகப் பெற்றோம். அப்படியாயின் 3 வருட காலம் இருந்த இயக்குனர் சபையினர் ஒரு கோடி ரூபாவை இலாபமாகப் பெற்றிருக்க வேண்டும். ஆனால் என்ன நடந்தது?

ஒரு பணியாளருக்கு ஒழுக்காற்று விசாரணை செய்வதற்கு 55ஆயிரம் ரூபா செலவு செய்யப்பட்டதாக கணக்குக் காட்டப்பட்டுள்ளது. மற்றுமொரு பணியாளருக்கு ஒழுக்காற்று விசாரணை செய்ய 50 ஆயிரம் ரூபா செலவு செய்ததாகக் காட்டப்பட்டுள்ளது. உண்மையில் ஒரு விசாரணைக்கு ரூ.5000 கூட பிடிக்காது. அரசாங்கமென்றால் இப்படிச் செய்ய முடியுமா?

### மோசடி

கல்முனை ப.நோ.கூ. சங்கம் 29 லட்ச ரூபாவுக்கு வாங்கிய இரு மினி பஸ்களை முன்னைய இயக்குனர் சபை ஆக 10 இலட்ச ரூபாவுக்கு விற்றுள்ளது. அநியாயம்! இவையெல்லாம் சங்கத்திற்கு பாரிய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இவைகளை நான் கூறாவிடில் கடமையில் தவறியவனாகக் கருதப்படுவேன்.

சபையில் ஊழல் முறைகேடுகள், துஷ்பிரயோகம் நடந்தால் அதனை உறுப்பினர்களாகிய நீங்களே சுட்டிக்காட்ட வேண்டும். கடமையை மீறும் ஊழியர்கள் தண்டிக்கப்பட வேண்டும். என்றார்.

"தமிழ் - முஸ்லிம் இன உறவுப் பாலமாக கல்முனை ப.நோ.கூ.சங்கம் திகழ வேண்டும்" என்று இவர் கேட்டுக்கொண்டார்.

# ஏறாவூர் பகுதி வீதிகள் செப்பனிட நடவடிக்கை

(ஏறாவூர் நிருபர்)


மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூர்ப் பற்று மற்றும் ஏறாவூர் நகர் ஆகிய பிரதேச பிரிவுகளில் கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக செப்பனிடப்படாத நிலையிலுள்ள பதினைந்து வீதிகள் மீண்டும் பராமரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் அலிஸாஹிர் மௌலானாவின் தலைமையில் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக ஏறாவூர் நகர பிரதேச சபைக் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற கூட்டத்தில் வீதிகள் பராமரிக்கும் பொறுப்பினை வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் வீதி அபிவிருத்தித் திணைக்களம் ஆகிய நிறுவனங்கள் பொறுப்பேற்றுக் கொண்டன.

வீரபத்திரன் கோயில் வீதி, எல்லை வீதி, தைக்கா வீதி, கலைமகள் வீதி, பெண் சந்தை வீதி, ஓடாவியார் வீதி, காயர் வீதி, கிராம நீதிமன்ற வீதி, முனைவளவு வீதி, சதாம் ஹுஸைன் கிராம வீதி, ஆலயடி வீதி, காட்டுப்பள்ளி வீதி போன்ற வீதிகள் மீளமைக்கப்படவுள்ளன.

வீதி அபிவிருத்தி அதிகார சபை மாவட்ட பிரதம பொறியியலாளர் தர்மரெத்தினம், வீதி அபிவிருத்தித் திணைக்கள பிரதம பொறியியலாளர் கே.ரி.சிவரன்ஜன் ஆகியோர் உட்பட அதிகாரிகள் பலர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.





மட்டக்களப்பு மாவட்டத்தில் தொலைக் கல்வி ஆசிரியர் பயிற்சியின் ஆரம்பகால சிரேஷ்ட விரிவுரையாளராக பல வருடங்கள் கடமையாற்றி ஓய்வு பெறும் க.நடராசாவுக்கு அண்மையில் மட்/ சிசிலியா பெண்கள் பாடசாலை மண்டபத்தில் பிரிபுபசார வைபவம் இடம் பெற்ற போது அவருக்கு தொலைக்கல்வி ஆசிரியை ஒருவர் மலர்மாலை அணிவித்து வரவேற்பதையும், சிரேஷ்ட விரிவுரையாளர்களில் ஒருவரான க.மனோகரன் மங்கள விளக்கேற்றுவதையும், ஓய்வு பெறும் விரிவுரையாளர் க.நடராசா உரையாற்றுவதையும் இங்கு காண்கிறீர்கள்.

(படமும்,தகவலும்:- அரியம்)

# தமிழ் மக்களின் எதிர்காலத்திற்கு வேட்டு வைக்கும் கல்முனை மாவட்டக் கோரிக்கை

## –காலத்திற்கு ஒவ்வாதது என்கிறது தமிழர் ஆசிரியர் சங்கம்–

(காரைதீவு நிருபர்)

அம்பாறை மாவட்டத் தமிழ் மக்களின் அரசியல், சமூக பொருளாதார விடயங்களில் எதிர்காலத்திற்கு வேட்டு வைக்கும் அம்சமாக கல்முனை தனி மாவட்டக் கோரிக்கை உள்ளது. இது காலத்திற்கு ஒவ்வாததும் கூட எனவே இதனை பகிரங்கமாக நாம் எதிர்க்கிறோம். என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க கல்முனை மாவட்டக்கிளை தீர்மானமெடுத்துள்ளது. மாவட்ட கிளைக்கூட்டம் புதனன்று பி.ப. 4.30 மணிக்கு மாவட்டத் தலைவர் வெ.ஜெகநாதன் (அதிபர்) தலைமையில் காரைதீவு சண்முகா வித்தியாலயத்தில் நடைபெற்றபோது ஏகமனதாக மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் கடந்த காலங்களில் அனுபவித்து வந்த கசப்பான துன்பகரமான அனுபவங்களே இம்மாவட்டக் கோரிக்கையை எதிர்ப்பதற்கு காரணமாகும்.

எமது சங்கம் கல்வியில் மாத்திரமல்லாது தமிழினத்தின் ஒட்டுமொத்தமான சகல நடவடிக்கைகளிலும் தன்னை ஈடுபடுத்தி வருகிறது. இவ்வகையில் இம்மாவட்டம் கல்வி ரீதியில் மட்டுமல்லாது சகல விடயங்களிலும் தமிழர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும்.

கல்முனை ஆதாரவைத்தியசாலை கிழக்குப் பல்கலைக் கழகம், கல்முனை நகர அபிவிருத்தி, கல்முனை தமிழ் பிரதேச செயலகம், காரைதீவு நாவிதன்வெளி பொத்துவில் பிரதேசசபை போன்ற இடங்களில் காட்டப்பட்டு வரும் இன்னோரன்ன பாரபட்சங்கள் புறக்கணிப்புகள் எதிர்கால அச்சத்தை ஏற்படுத்தியுள்ளன.

கல்முனை கல்வி மாவட்டத்தில் வலயப் பிரிப்புகளை மேற்கொண்ட போது தமிழ் பாடசாலைகள் பெரும் பான்மையாக வரா வண்ணம் திட்ட ஆட்சி செயற்பட்டமையை சுட்டிக்காட்ட முடியும்.

கல்முனை தமிழ் வலயம் உருவாக முயற்சிகள் எடுக்கப்பட்ட போது முற்றாக எதிர்ப்புக் காட்டப்பட்டது. அக்கரைப்பற்று வலயத்திற்கு ஒரு தமிழ் சகோதரரே வலயக் கல்விப்பணிப்பாளராக இருப்பார் என்று வாய் இனிக்கக் கூறினார்கள் நடந்தது என்ன?

மாவட்டத்திலுள்ள தமிழ் மக்கள் தமது உரிமைகளைக் கோரும் போது ஏன் ஒற்றுமையைக் குலைக்கிறீர்கள் என்று கேட்டார்கள். ஆனால் அவர்கள் கல்முனைத் தெற்கு வைத்தியசாலை என்றும் எம்.ஓ.எச் என்றும் தன்னிச்சையாகப் பிரித்துக் கொண்டே போனார்கள்.

எனவே, இதனை "எதிர்ப்பது எமது தார்மீக கடமை" என்று தீர்மானம் நிறை வேற்றப்பட்டுள்ளது. கிளைகளின் சார்பில் கே.செல்வராசா (கல்முனை), எம்.சிவபாலன் (காரைதீவு), ஜே.இராஜேந்திரா (சம்மாந்துறை), எஸ்.இன்பராஜா (ஆலையடிவேம்பு), செ.மணிமாறன் (காரைதீவு)எஸ்.கமலநாதன் (ஆலையடிவேம்பு) ஆகியோர் கலந்து கொண்டனர். மாவட்டச் செயலாளர் வி.ரி.சகாதேவராஜா நன்றியுரையாற்றினார்.

# பட்டிப்பளைக் கல்விக் கோட்ட மட்ட தமிழ் மொழித் தினப்போட்டி முடிவுகள்

பட்டிருப்பு வலயக் கல்வி அலுவலகத்தோடு கல்வி நிருவாகத்துடன் இணைந்துள்ள பட்டிப்பளைக் கல்விக் கோட்டத்திற்கு உட்பட்ட பாடசாலைகளுக்கிடையே தமிழ் மொழித்தினமானது அண்மையில் அரசடித்தீவு விக்னேஸ்வரா வித்தியாலயத்திலும் கொக்கட்டிச்சொலை இ.கி.மி.வித்தியாலயத்திலும் திருமதி இ.கருணாநிதி ஆசிரிய ஆலோசகர் தலைமையில் இரண்டு தினங்களும் மிகச் சிறப்பாக இடம் பெற்றது.

இவ்விழாவுக்கு கோட்டக்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் உலககேஸ்பரம் உதவிக் கல்விப் பணிப்பாளர் க.செந்தில்நாயகம் ஆசிரிய ஆலோசகர்களான சீ.விசுவலிங்கம், மு.நடேசானந்தன், செ.பாலசுந்தரம், தே.தட்சணேஸ்வரமூர்த்தி க.மாணிக்கப்போடி திருமதி டே.இராஜகுமாரன் ஆகியோரும், நடுவர்கள், பாடசாலை அதிபர்கள் அனைவரும் கலந்து சிறப்பித்தனர். பட்டிப்பளைக் கோட்ட கல்வி அபிவிருத்திச் சபையினது அனுசரணையுடன் நிகழ்வுகள் இரு நாட்களும் மிகச் சிறப்பாக இடம்பெற்றன. அதன் முடிவுகள் பின்வருமாறு.

| நிகழ்ச்சி | பிரிவு | வெற்றி பெற்ற நிலை | மாணவர் பெயர் | பாடசாலை |
|---|---|---|---|---|
| 1.வாசிப்பு | 1 | 1 | அ.கிருஷினி | முதலைக்குடா ம.வி |
| | | 2 | தே.கீரத்தனா | அம்பிளாந்துறை த.ம.வி |
| 2. ஆக்கத்திறன் வெளிப்பாடு | 1 | 1 | வி.வரதராஜன் | கொக்கட்டிச்சோலை இ.கி.மி.வித் |
| | | 2 | வ.கோபிகா | முனைக்காடு வி.வித் |
| 3. வாசிப்பு | 2 | 1 | த.ஜெமஸ்கரன் | அரசடித்தீவு வி.வித் |
| | | 2 | எ.கிரிஜா | முதலைக்குடா ம.வி |
| 4.எழுத்து ஆக்கம் | 1 | 1 | ச.கோபிகா | மகிழடித்தீவு |
| | | 2 | கி.ரகுபரன் | அரசடித்தீவு விக்.வித் |
| 5.கட்டுரை வரைதல் | 2 | 1 | யோ.மனோரமணி | அம்பிளாந்துறை த.ம.வி |
| | | 2 | ந.பாசமலர் | முனைக்காடு வி.வித் |
| | 3 | 1 | த.உமாரமணன் | அம்பிளாந்துறை த.ம.வி |
| | | 2 | ம.பிரசாந்தினி | கொக்கட்டிச்சோலை இ.கி.மி.வித் |
| | 4 | 1 | நா.சுபாஜினி | முதலைக்குடா ம.வி |
| | | 2 | பொ.தேவகி | அரசடித்தீவு விக்.வித் |
| | 5 | 1 | சி.ஜீவரதி | அரசடித்தீவு விக்.வித் |
| | | 2 | சு.ஸ்ரீநாதன் | அம்பிளாந்துறை த.ம.வி |
| 6. கவிதை | 4 | 1 | பொ.ஜசிதா | முதலைக்குடா ம.வி |
| | | 2 | ந.சிவகரன் | மகிழடித்தீவு த.வித் |
| | 5 | 1 | யோ.கமலராஜா | அரசடித்தீவு வித் |
| | | 2 | தி.குமுதினி | கொக்கட்டிச்சோலை |
| 7. சிறுகதை | 4 | 1 | மு.இராஜேந்திரன் | மகிழடித்தீவு ச.வித் |
| | | 2 | வ.புஸ்பகிரி | கொக்கட்டிச்சோலை இ.சி.மி.வித் |
| | 5 | 1 | ம.குணலெட்சுமி | அம்பிளாந்துறை த.ம.வி |
| 8. பேச்சு | 1 | 1 | ப.விஜிதரன் | முதலைக்குடா ம.வி |
| | | 2 | த.தட்சாயினி | கொக்கட்டிச்சோலை இ.கி.மி.வித் |
| | 2 | 1 | வ.கலிஸ்கா | அம்பிளாந்துறை க.ம.வி. |
| | | 2 | தெ.தட்சாயினி | முனைக்காடு வி.வித் |
| | 3 | 1 | சி.சிவரூபன் | அம்பிளாந்துறை க.ம.வித் |
| | | 2 | ர.கஜேந்திரன் | முதலைக்குடா மீ.வி. |
| | 4 | 1 | சி.ஜீவிதன் | முதலைக்குடா ம.வி |
| | | 2 | செ.ஜினிதா | கொக்கட்டிச்சோலை இ.கி.மி.வித் |
| | 5 | 1 | பூ.புனிதவதி | முதலைக்குடா ம.வி |
| | | 2 | இ.பேரின்பநாயகி | அரசடிதீவு |
| 9. பாவோதல் | 1 | 1 | ச.நிரோஜினி | முனைக்காடு ம .வி |
| | | 2 | சி.யசோதினி | பண்டாரியாவெளி அ.த.க.பா |
| | 2 | 1 | பே.சுகிர்தா | அம்பிளாந்துறை க.ம.வி |
| | | 2 | ச.கிருபைராசா | முனைக்காடு வி.வித் |
| | 3 | 1 | ச.நிமாலினி | முனைக்காடு வி.வித் |
| | | 2 | சி.கோகிலவாணி | கடுக்காமுனை வா.வித் |
| | 4 | 1 | சி.சுபாஜினி | கடுக்காமுனை வா.வித் |
| | | 2 | க.சந்திரேகா | மகிழடித்தீவு |
| 10. இசை(தனி) | 2 | 1 | கோ.விஜிதா | கடுக்காமுனை வா.வித் |
| | | 2 | ச.கோகுலதீபன் | மகிழடித்தீவு ச.வித் |
| | 3 | 1 | க.ஜெயரூபன் | முதலைக்குடா ம.வி |
| | | 2 | ந.தினுஜா | அம்பிளாந்துறை க.ம.வி |
| | 4 | 1 | க.ஜீவிதா | அம்பிளாந்துறை க.ம.வி |
| | | 2 | சி.குவிந்தா | முதலைக்குடா ம.வி |

இலக்கிய நாடகத்திலும், இசை (குழு) விலும் (தி.போட்டி) அம்பிளாந்துறை க.ம.வித்தியாலயமும், நடனம் குழுவில் அரசடித்தீவு வி.வித்தியாலயமும், வில்லுப்பாட்டு நிகழ்ச்சியில் கடுக்காமுனை வா.வித்தியாலயமும் முதலிடத்தைத் தட்டிக் கொண்டன.

சென்ற வருடத்தை விடவும் இம்முறை கடும் போட்டிகள் மூலம் மாணவர்கள் முதலிடத்தினைத் தட்டிக் கொள்ள நேரிட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

**தொகுப்பு:-**
**மு.நடேசானந்தன்**
**முதலைக்குடா**

# கரையோர மாவட்டத்தை வென்றெடுக்க பூரண ஒத்துழைப்பு வழங்கப்படும்!

## –சாய்ந்தமருது மு.கா.எழுச்சி மாநாட்டில் எவசைன்றசீட்–

(காரைதீவு நிருபர்)

கல்முனை கரையோர மாவட்டக் கோரிக்கையை வென்றெடுக்க பூரண ஒத்துழைப்பு வழங்குவதென்றும், அதற்கு இரவு பகலாக உழைக்கும் றிஸ்விசின்னலெவ்வை எம்.பி.க்கு உற்சாகமளிப்பதென்றும் ஏகமனதாக தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

இத்தீர்மானம் கடந்த ஞாயிறன்று சாய்ந்தமருது அல்ஹிலால் வித்தியாலயத்தில் நடைபெற்ற ஸ்ரீலங்கா.மு.கா.சின் சாய்ந்தமருதுக்கான எழுச்சிக் கூட்டத்தில் எடுக்கப்பட்டது. கூட்டத்திற்கு தலைவர் அல்ஹாஜ் எம்.ஐ.உதுமாலெவ்வை (எவசைன் றசீட்) தலைமை வகித்தார். மௌலவி ஆதம்பாவா கிறா அத் ஓதினார்.

சாய்ந்த மருது ஸ்ரீல.மு.கா.வின் முக்கியஸ்தர்கள் அமைப்பாளர்கள், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்கள், போராளிகள் ஆகியோர் ஏகமனதாக பின்வரும் தீர்மானங்களை நிறைவேற்றினர்.

சாய்ந்தமருது அமைப்பாளர் ஏ.எல்.ஏ.றீசட் (புர்க்கான்) அவர்களின் செயற்பாடுகளைக் கண்டிப்பதுடன் அவர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றவும்பட்டது.

புதிய அமைப்பாளராக எம்.ஐ.உதுமாலெவ்வையை நியமித்துத் தருமாறு அமைச்சர் றவூப்பிடமும், றிஸ்வி எம்.பியையும் கோருவது.

மறைந்த தலைவர் மர்ஹூம் அஷ்ரப்பின் அனுசரணையுடன் உருவான சாய்ந்த மருது பிரதேச செயலகத்துக்காக அயராது பாடுபட்ட றிஸ்வி எம்.பி.க்கு பாராட்டு விழா எடுத்தல்.

கல்முனைத் தொகுதி அமைப்பாளரும், எம்.பி.யுமான றிஸ்வி சின்ன வெலவ்வையின் அனுசரணையுடன் சாய்ந்தமருது 17 பிரிவு அமைப்பாளர்களையும், செயலாளர்களையும் கொண்டு அமைப்பாளர் அல்ஹாஜ் ஐ.எம். உதுமாலெவ்வையின் தலைமையில் மத்திய குழுவை ஏற்படுத்தல். றிஸ்வி எம்.பியின் அனுசரணையுடன் அமைப்பாளர் உதுமாலெவ்வையின் தலைமையில் 7 அல்லது 11 பேர் கொண்ட மசூறா சபையை ஏற்படுத்தல்.

றிஸ்வி எம்.பி. தொடர்ந்தும் கல்முனைத் தொகுதி எம்.பியாகவும் அமைப்பாளராகவும் இருக்க வேண்டுமென்று அமைச்சர் றவூப் ஹக்கீமுடன் வேண்டுதல்.

முன்னாள் அமைப்பாளர் புர்க்கானின் செயற்பாடுகள் சாய்ந்த மருது கிராமத்தின் சகல விடயங்களிலும் பின்தள்ளப்படும் நிலைக்கு வந்ததை யாரும்மறுக்க முடியாது.

அவரது சர்வாதிகாரப் போக்கினைப் பற்றி கட்சிப் போராளிகள் அதிருப்தி கொண்டுள்ளனர். கட்சியின் உயர் பீட உறுப்பினர்களின் கட்டளைகளைப் புறக்கணித்து தொடர்ச்சியாக இயங்கி வருவது அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. எனவே அவரை இடை நிறுத்துவதென்றும் சபை ஏகமனதாக தீர்மானித்தது.





# கிறிக்கட் பற்றித் தெரிந்து கொள்ளுங்கள்

(தொகுப்பு பிரகாஸ்)

கிறிக்கட் விளையாட்டு இன்று மிகவும் பிரபல்யமாக எங்கும் விளையாடப்படுகிறது. இதற்கென் றோர் மிகக் கூடுதலான ரசிகர் கூட்டம் இருப்பதையும் அவதானிக் கலாம். அந்த வகையில் கிறிக்கட் பற்றித் தெரிந்து கொள்வதற்காக சில விளக்கங்களை இங்கே தருகிறோம்.

### 1. விக்கட்

மூன்று விக்கட்டுக்கள்
இரண்டு பேல்ஸ்





### 2. பந்து (Ball)


சுற்றளவு 22.4 - 22.9cm
நிறை 155.9 - 163g




### 3. மைதானம்(pitch)




### 4. அடிப்படை களத்தடுப்பு நிலைகள்
### (Basic Filiding Positions)




1. தே மேன்
2. பீபைன் லெக் மிட் ஓவ்
3. சோ தே மேன்
4. சோ ைன் லெக்
5. பைன் லெக்
6. லோங் லெக்
7. செக்கண்ட் சிலிப்
8. எஸ்குயார் லெக்
9. ∴பெஸ்ட் சிலிப்
10. விக்கட் கீப்பர் (விக்கட் காப்பாளர்)
11. கலி
12. சோட் லெக்
13. பொயின்ட்
14. பட்ஸ் மேன்
15. டீப் ஸ்கேயார் லெக்
16. சிலி பொயின்ட்
17. போவே
18. கவர் பொயின்
19. சிலி மிட் ஓன்
20. மிட் விக்கட்
21. எக்ஸ்ரா கவர்
22. போலர் (பந்து வீச்சாளர்)
23. மிட் ஓவ்
24. டீப் மிட் விக்கட்
25. மிட் ஓவ்
26. மிட் ஓன்
27. லோங் ஓவ்
28. லோங் ஓன்

இந்த அடிப்படை களத்தடுப்பு நிலைகளிலே அனேகமான வற்றிற்கு தமிழ்ச் சொற்கள் கொடுக்கப்பட வில்லை. என்ற காரணத்தால் ஆங்கில உச்சரிப்பையே தமிழில் தந்திருக்கிறோம்.





**ஆரையம்பதி விளையாட்டுக்கழகமும், இளம் தென்றல் விளையாட்டுக் கழகமும், வைத்தியசாலை ஊழியர்களும் இணைந்து அண்மையில் ஆரையம்பதி மாவட்ட வைத்தியசாலையில் சிரமதானத்தில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதையும் சிரமதானத்தில் கலந்து கொண்டவர்களுடன் வைத்திய அதிகாரி எஸ்.நீதிராஜன் அவர்கள் நிற்பதையும் படத்தில் காண்க.**

**(படமும் தகவலும்:- ச.கணேசதாஸ்)**

## வாசகர் நெஞ்சம்

### கிழக்குப் பல்கலைக்கழகம் கண்டிக்காதது ஏன்?

கடந்த 14.06.2001 வியாழன் காலை வந்தாறுமூலை கிழக்குப் பல்கலைக்கழகத்தில் ஸ்ரீலங்கா அரச படைத்துறையினர் நடத்திய தேடுதல் சுற்றி வளைப்புத் தொடர்பாக கிழக்கு கல்வி சமூகம் கண்டித்து எதிர்ப்புக் காட்டாது மௌனம் சாதிப்பது ஏன்?

குறிப்பாக நேரடியாக அச்சுறுத்தலுக்கு உள்ளான கிழக்குப் பல்கலைக்கழகச் சமூகம் சம்பவத்தைக் கண்டிக்காதிருப்பது படைத்துறையினரின் செயற்பாட்டை ஆமோதிப்பதாகக் கொள்ளப்பட வாய்ப்புண்டல்லவா?

''தினக்கதிர்'' முதலான ஊடகங்களும் செல்வம் அடைக்கலநாதன் (ரெலோ- பா.உ) என்ற வன்னி அரசியற் பிரமுகரும் கண்டிப்பது மட்டும் போதுமானதா?

இத்தகைய அச்சுறுத்தலின் தொடர்ச்சியாகக் கடந்த வாரம் வன்னியிலிருந்து வந்த கிழக்குப் பல்கலைக்கழக மாணவர் ஸ்ரீலங்கா புலனாய்வுத் துறையினரின் கடும் விசாரணைக்குட்படுத்தப்பட்டதுடன் ஒரு அப்பாவி மாணவன் கைது செய்யப்பட்டுமுள்ளான்.

இவ்வாறான அரச ப்யங்கரவாதங்களைக் கண்டித்து தம்மைத் தற்காத்துக் கொள்ள கிழக்கு கல்விச் சமூகம் முன்வருதலே தம்மை தற்காக்க உதவும் வழியாகும்.

**எஸ்.மதுமிதா**
**ஏறாவூர்**

### ஆரையம்பதி தீர்த்தக்கரை வீதி திருத்தப்படுமா?

ஆரையம்பதி தீர்த்தக்கரை வீதி (கடற்கரை வீதி) அகன்ற குன்றும் குழியுமாகக் காட்சியளிக்கின்றது. ஆலயங்களின் உற்சவத்தின் போது தீர்த்தோற்சவத்திற்கும், பொது மயானத்திற்கும் செல்லும் பிரதான வீதியாக விளங்கும் இவ்வீதி திருத்தப்பட வேண்டும்; மழை காலங்களில் குழிகளில் நீர் தேங்கி நிற்பதனால் மக்கள் பிரயாணம் செய்வது சிரமமாகக் காணப்படுகின்றது.

எனவே. இவ் வீதியைத் திருத்தி அமைப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தினக்கதிரூடாகக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

**ச.கணேசதாஸ்**
**ஆரையம்பதி**

### கல்லடி சிறுவர் பூங்காவின் கதி

கல்லடி-டச்பார் கடற்கரைச் சந்தியில் அமரர் செழியன் பேரின்பநாயகத்தின் சிபார்சில் மாநகர சபையினால் சிறுவர் பூங்கா அமைக்கப்பட்டது. அது எல்லோராலும் வரவேற்கப்பட்டது. அத்தோடு மிக மகிழ்சியும் அடைந்தோம். தினமும் சிறுவர்களாகிய நாங்கள் மாலையில் விளையாடுவோம்.ஆனால் இப்போது அந்த சிறுவர் பூங்காவில் விளையாடுவதற்கு ஒரு உபகரணங்களும் இல்லை. எல்லாம் உடைந்து வெறும் இடம் மாத்திரம் தான் இருக்கிறது. இதை சம்மந்தப்பட்ட அதிகாரிகளோ அல்லது நாடாளுமன்ற உறுப்பினர்களோ மாநகரசபையோ கண்டும் காணாமல் இருப்பது தான் வேதனை. சிறுவர் பூங்கா இருந்த இந்த இடத்தை மதுப் பிரியர்கள் பயன்படுத்துகிறார்கள். மீண்டும் சிறுவர் பூங்காவை அமைக்க உடன் நடிவடிக்கை எடுக்க வேண்டும் என்று வேண்டுகிறோம்.

**அன்ரனி யேசுகுமார்**
**கல்லடி.**

### ஆசிரியர் கலாசாலையின் குறைபாடுகள் தீருமா?

மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை பெயரளவில் தான் உள்ளது. ஆனால் அங்கே கல்வி பயிலும் ஆசிரியர் மாணவர்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.

இக்கலாசாலையில் வகுப்பறைகள், விடுதிகள், நீர்வசதி, விளையாட்டு மைதானம், விடுதி வசதி எனப் பல குறைபாடுகளை அடுக்கிக் கொண்டே போகலாம்.

கடந்த வருடம் 240 ஆசிரிய மாணவர்கள் சேர்க்கப்பட்டனர். இவர்களில் 108 மாணவர்களே வன்னி மாவட்டத்தில் இருந்து பல கஷ்டரங்களின் மத்தியில் இங்கு வந்து பயிற்சி பெறுகின்றனர்.

இவ்வருடமும் இடவசதியின்மையினால் ஒரு குறிப்பிட்ட தொகை மாணவர்கள் மட்டுமே அனுமதிக்க முடிந்துள்ளது.

இக்குறைகளை மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்கள், பிரதி அமைச்சர் என்போர் கண்டும் காணாமல் இருப்பது வேதனைக்குரிய செயல்.

தேர்தல் காலத்தில் வாக்குறுதிகளை அள்ளி வீசியவர்கள். தற்போது என்ன செய்கிறார்கள் என பொதுமக்கள் கேட்கிறார்கள்.

**ஏ.எம்.பிரான்சிஸ்**
**மட்டக்களப்பு.**

# பொதுஜன ஐக்கிய முன்னணியில் இருந்து முஸ்லிம் காங்கிரஸ் விலக வேண்டும்

(க்ாறுாப.வ்ரு.ஶ்ரு.ஐ ர்பகுஷ்ரி ர்பூகூத்ஷ்ரி)

**சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசிலிருந்து விலக வேண்டுமெனக் கோரும் தீர்மானம் ஒன்றை சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சாய்ந்தமருது மத்தியகுழு ஏகமனதாக நிறைவேற்றியுள்ளது.**

சாய்ந்தமருது முஸ்லிம் காங்கிரஸ் மத்திய குழுவின் விசேட கூட்டம், முஸ்லிம் காங்கிரஸ் அமைப்பாளர் ஏ.எல்.எம்.றசீட் (பூர் கான்ஸ்) தலைமையில் மத்திய குழுப் பணிமனையில் நடைபெற்ற போதே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்தில் கல்முனைக் கரையோர மாவட்டம், கட்சியின் அண்மைக்கால நிலைமைகள் என்பன தொடர்பாக ஆராயப்பட்டதன் முடிவாக அரசிலிருந்து முஸ்லிம் காங்கிரஸ் வெளியேற வேண்டுமென எடுக்கப்பட்ட தீர்மானத்திற்குப் பின்வரும் காரணங்களும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டன.

அ) பொதுஜன ஐக்கிய முன்னணி அரசும் ஜனாதிபதியும் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரசுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ளாமை.

ஆ) கல்முனைக் கரையோர மாவட்ட விடயத்தை வாக்குறுதியளித்துவிட்டு அரசு உரிய காலத்துக்குள் வழங்காது இன்னும் இழுத்தடிப்புச் செய்து வருகின்றமை.

இ) காலஞ்சென்ற மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரபின் அகால மரணம் தொடர்பாக ஆணைக்குழு நியமிப்பதில் இழுத்தடிப்புச் செய்தமையும், ஆணைக்குழுவில் முஸ்லிம் பிரதிநிதி எவரையும் நியமிக்காமை

ஈ) சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸிலிருந்து உருவாக்கப்பட்ட தேசிய ஐக்கிய முன்னணி கட்சியின் சகல அதிகாரங்களும் முஸ்லிம் காங்கிரஸ் தலைமைத்துவத்தினால் கட்டுப்படுத்தப்பட வேண்டும்.

உ) திகாமடுல்ல மாவட்டத்திலுள்ள வாக்காளர்களினால் தெரிவு செய்யப்பட்ட முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சியின் தலைமைத்துவத்தில் அவர்கள் கட்சியின் தலைமைத்துவத்திற்குக் கட்டுப்படாத பட்சத்தில் உடனடியாக அவர்கள் கட்சியின் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்படுத்தப்படவேண்டும்.

ஊ) முஸ்லிம் காங்கிரஸ் கட்சியாப்பில் தலைமைத்துவத்திற்கு இருக்கின்ற அதிகாரங்களில் எதுவிதமான குறைப்பும் செய்யப்படக்கூடாது என்னும் தீர்மானங்களும் எடுக்கப்பட்டன.

## தேவாபுரம் பகுதி வீடொன்றில் ஆயுத முனையின் கொள்ளை

(ரமேஸ்)

வந்தாறுமூலை தேவாபுரம் பகுதியில் அமைந்துள்ள வீடொன்றில் ஆயுதங்களுடன் புகுந்த மூன்று பேர் கொண்ட குழு வீட்டிலிருந்த சுமார் 35 ஆயிரம் ரூபா பெறுமதியான பணம், நகைகளைக் கொள்ளையிட்டு சென்றுள்ளது.

இப்பகுதியில் அமைந்துள்ள இளைஞர் ஒருவரின் வீட்டினுள் இரவு ஒன்றரை மணியளவில் புகுந்த இக்குழு, அவரிடம் வேலாயுதம் தயாபரன் என்பவரது வீட்டைக் காட்டும்படி கேட்டு, அவரது வீட்டுக்குச் சென்று நித்திரையாகவிருந்த தயாபரனையும் மனைவியையும் எழுப்பி, இக் கொள்ளையினை நடாத்தியுள்ளது.

சம்பவத்தின் போது தயாபரனது ஷேர்ட் 'பொக்கட்'டிலிருந்த 7 ஆயிரம் ரூபா பணத்தினையும் லாச்சி ஒன்றினுள் இருந்த சுமார் 28 ஆயிரம் ரூபா பெறுமதியான இரு காப்புக்களையும் இக்குழு அபகரித்துச் சென்றுள்ளதாக முறையிடப்பட்டுள்ளது.

## சந்திவெளியில் 3 இலட்சம் பெறுமதியான பொருள் கொள்ளை

(ரமேஸ்)

சந்திவெளியில் அமைந்துள்ள எழுவான் விநாயகர் ஸ்டோர்ஸ் மற்றும் கார்த்திகா ஸ்டோர்ஸ் ஆகியவற்றிலிருந்து நேற்று முன்தினமிரவு சுமார் மூன்று இலட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் கொள்ளையிடப்பட்டுள்ளன.

வயலுக்கு தெளிக்கப்படும் கிருமி நாசினி வகைகள் மற்றும் மின்சார உபகரணப் பொருட்கள் என்பனவே இவ்வாறு கொள்ளையிடப்பட்டுள்ளன.

கடையின் பின்புறக் கதவில் இருந்த மூன்று ஆமைப் பூட்டுகளை அறுத்து உடைத்தே இக்கொள்ளை நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாக ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

## புதுநகர் சித்தி விநாயகர் இன்று கொடியேற்றம்

(நமது நிருபர்)

மட்டக்களப்பு புதுநகர் அருள்மிகு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய, ஆனி உத்தர வருடாந்த மகோற்சவம் இன்று முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

எதிர்வரும் 28.06.2001 அன்று ஆனி உத்தர தினத்தன்று தீர்த்தோற்சவம். அன்றிரவு கொடியிறக்கம் என்பவற்றுடன் உற்சவம் இனிதே நிறைவுறும்.

## ஜானக பெரேரா.......

*(1ம் பக்கத் தொடர்ச்சி)*

வித்தார்.

அத்துடன் பல பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது நடவடிக்கைக்கு ஆதரவு வழங்கியதுடன் இந்நியமனம் தொடர்பாக அரசாங்கத்திடம் கேள்வி எழுப்பவுள்ளதாகவும் கூறினார்.

ஜானக பெரேரா யாழ் மாவட்டத்தளபதியாக இருந்த காலத்தில் ஆயிரத்துக்கு மேற்பட்ட தமிழர்கள் காணாமல் போயுள்ளனர். இவ்வாறு மோசமான இராணுவ பின்னணி கொண்டவரை ஒரு போதும் அவுஸ்திரேலியா நியமிக்கக்கூடாது என தமிழ் மக்கள் கூட்டமைப்பின் தலைவர் அ.பரராசசிங்கம் தெரிவித்தார்.

## காத்தான்குடியில்.......

*(1ம் பக்கத் தொடர்ச்சி)*

எரிக்கப்பட்டது.

இதன் காரணமாக மட்டக்களப்பு கல்முனை பகுதிக்கான போக்குவரத்துக்களும் இடம்பெறவில்லை.

இதேவேளை காத்தான்குடி ஏறாவூரில் நேற்று விசேட பிரார்த்தனைகள் இடம்பெறவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சர் ரவூப் ஹக்கீம் அவர்கள் நேற்றைய நாளை பிரார்த்தனை நாளாக அனுஷ்டிக்கும்படி வேண்டுகோள் விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## யாழ் குடா............

*(1ம் பக்கத் தொடர்ச்சி)*

ணுவத் தளபாடங்களையும் களமுனைக்கு நகர்த்தி வருகின்றனர்.

**ஷெல்வீச்சு**

இது இவ்விதமிருக்க, பூநகரிப் பகுதியில் புலிகள் தமது படையணிகளைக் குவிக்கலாம் என்ற அச்சத்தின் காரணமாக நேற்று குடாநாட்டுப் பகுதியிலிருந்து பூநகரிப் பகுதி நோக்கி அடிக்கடி ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

குடாநாட்டுப் பகுதியில் முன்னையதை விட, கடந்த மூன்று நாட்களாக படையினரது நடமாட்டம் மிகவும் அதிகரித்திருப்பதையும் அவதானிக்க முடிகிறது.

**மக்கள் அச்சம்**

குடாநாட்டில் தற்போது தோன்றியுள்ள இந்தப் போர் நிலவரங்கள் காரணமாக மக்கள் மத்தியில் பெரும் அச்சம் நிலவுகிறது. எந்நேரமும் பெரும் போர் ஒன்று வெடிக்கலாம் என்ற அச்சம் காரணமாக மக்கள் பீதியுடன் காணப்படுகின்றனர்.

சமாதான முயற்சிகள் பெரும் பின்னடைவுகளைச் சந்தித்துள்ள நிலைமையில், தற்போது போர் மூண்டால், அது பாரிய அளவினதாகவே இருக்கும் எனவும், இது பெரும் இழப்புக்களையும் தோற்றுவிக்கும் எனவும் மக்கள் அச்சங் கொண்டுள்ளனர்.

## தென்னிலங்கை.......

*(1ம் பக்கத் தொடர்ச்சி)*

கப்படும் நடவடிக்கைகள் முன்னேற்றகரமானவையே. ஆனால் ஆங்கில அறிவு மிக்க ஆசிரியர்களின் தொகை மிகக் குறைவாகவே உள்ளது.

அது மட்டுமின்றி உயர்தர வகுப்பில் ஆங்கில மொழிமூல போதனையை ஆரம்பிக்க முன் ஆரம்ப வகுப்பிலிருந்தே ஆங்கிலத்தை ஒழுங்காகப் போதிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

தற்போதைய நிலையில் ஆங்கில மொழிமூல போதனை விஞ்ஞான பிரிவில் பயிலும் பெருமளவு மாணவர்கள் பல்கலைக் கழகம் செல்லும் வாய்ப்பை மறுப்பதாகவே அமையும் என அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

## இன ஒற்றுமை.......

*(1ம் பக்கத் தொடர்ச்சி)*

யத்தில் மிகவும் கவனமாக நடந்து கொள்ளுமாறு உங்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் அலிசாஹிர் மௌலானா விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்ததாவது,

எமது பகுதியைப் பொறுத்தவரை நமது இரண்டு இனங்களும் ஒன்றுபட்டு வாழ வேண்டிய கட்டாய நிலையில் இருக்கின்றோம். தொழில் ரீதியாக முஸ்லிம்கள் தமிழ் பிரதேசத்திற்கும் தமிழ் மக்கள் முஸ்லிம் பிரதேசத்திற்கும் சென்று அன்றாட வாழ்க்கையை ஓட்ட வேண்டியவர்களாக உள்ளனர். இதனை யாராலும் மறுக்க முடியாது.

கடந்த காலத்தில் ஏற்பட்ட அநாகரிகமான, கசப்பான சம்பவங்கள் இனிவரும் காலங்களில் எமது பிரதேசத்தில் சமூகங்களுக்கிடையில் ஏற்படாமல் தடுப்பதற்கான அத்தனை முயற்சிகளையும் நாம் மேற்கொள்ள வேண்டும்.

எனவே, பொதுமக்களாகிய நீங்கள் அனைவரும் பொறுமை காத்து மிக நிதானமாக சகோதர சமூகங்களை மதித்து எமது பகுதியில் அமைதியான சூழல் ஏற்பட இறைவனைப் பிரார்த்திக்குமாறு மிகவும் விநயமாக வேண்டுகிறேன்.

## அம்பாறை.......

*(1ம் பக்கத் தொடர்ச்சி)*

மூலம் எமது எதிர்ப்பை அரசுக்கு காட்டியுள்ளோம். இது எமக்கு பூரண வெற்றியாகும்.

கரையோர மாவட்ட விடயத்தில் அரசு இன்னும் இழுத்தடிப்புச் செய்யுமானால் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் உட்பட அனைத்து மு.கா.அமைச்சர்களும், எம்.பிக்களும் அரசை விட்டு விலக வேண்டும். அதன் மூலமே எமது உரிமைகளையும், முஸ்லிம் சமூகத்தின் தன்மானத்தையும் காப்பாற்ற முடியும். இல்லையேல் பேரினவாதிகளின் அடிமைகளாக வாழ நேரிடும் என்பதில் ஐயமில்லை எனவும் எம்.ஐ.எம்.மன்சூர் மேலும் தெரிவித்தார்.

## மட்டக்களப்பில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பயிற்சி!

(அரியம்)

மட்டக்களப்பு தொழில்நுட்பக் கல்லூரியில் வெளிநாட்டில் தொழில் பெற்று செல்வோர்களுக்கு விஷேட பயிற்சி பெறுவதை நோக்கமாகக் கொண்டு தற்போது (வெல்டிங்) உலோகம் ஒட்டுதல் துறையில் பயிற்சிநெறி ஆரம்பிக்கப்படவுள்ளது.

எதிர்வரும் யூலை மாதம் 1ம் திகதி ஆரம்பிக்கப்படவிருக்கும் இப்பயிற்சிநெறியில் பயிற்சிபெற விரும்பும் இளைஞர்கள் அதிபர் தொழில்நுட்பக் கல்லூரி மட்டக்களப்பு எனும் முகவரிக்கு இம்மாதம் 27ம் திகதி புதன்கிழமைக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை அனுப்பி வைக்கும்படி வேண்டப்படுகின்றனர்.

இப்பயிற்சிநெறி சனி ஞாயிறு தினங்களில் தொடர்ந்து 10 வாரங்கள் இடம் பெறவுள்ளது. இரண்டு தொடக்கம் மூன்று வருட அனுபவம் உள்ளவர்கள் இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கும்படி தொழில்நுட்பக் கல்லூரியின் அதிபர் எம்.குணரெட்ணம் தெரிவித்தனர்.

## ஏறாவூரில்........

*(1ம் பக்கத் தொடர்ச்சி)*

அத்துடன் விறகு விற்பனைக்கு சென்ற விறகு தொழிலாளர்களும் திருப்பி அனுப்பப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை செங்கலடிக்கு வியாபாரத்துக்கு சென்ற முஸ்லீம்கள் அங்கு நின்ற சில இளைஞர்களால் திருப்பி அனுப்பப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இதனைத் தொடர்ந்தே தற்போது பதட்டம் நிலவி வருகின்றது.

இச்சம்பவத்தை தொடர்ந்து தமிழ் முஸ்லீம் பிரமுகர்கள் இதற்கான தீர்வு காணும் முயற்சியில் ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

## கிரானில் சட்டவிரோத மின்பாவனை துண்டிப்பு

(அரியம்)

கிரான் பகுதியில் சட்டவிரோதமாக மின் இணைப்பு பெற்றிருந்த வீடுகளின் மின் இணைப்புக்களை நேற்று இலங்கை மின்சார சபையினர் படையினரின் துணையுடன் அகற்றினர்.

கிரானின் விஸ்னு ஆலய வீதி, சந்தை வீதி, பலநோக்குக் கடை வீதி ஆகிய இடங்களில் இவ்வாறு பல வீடுகளில் சட்டவிரோதமான முறையில் மின் இணைப்புக்களை அங்குள்ள மக்கள் நீண்ட காலமாக பாவித்து வந்தனர் என இலங்கை மின்சார சபையின் உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.


**கண்ணீர் நினைவுகள்**

மலர்வு 17 - 08 - 1985



உதிர்வு 20 - 05 - 2001

தங்கத்துரை – யாழினி

எங்களது துயர் துடைக்க
எழுந்த எம்மகளே
ஏன் நீயே மௌனித்தாய்
உன் உருவம் மறைந்தாலும்
உயர் நினைவு மறையாது.

உமது பிரிவால் வாடும்
நண்பர்கள்

Advt.


இப்பத்திரிகை வேல்ட் வொயிஸ் பப்ளிகேஷன் நிறுவனத்தினால் ஈஸ்ரன் கிராபிக்ஸ் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.